பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 20 திங்கட்கிழமை 03.05.2021 கதிர் 179

### இனி இது ரகசியம் அல்ல!

சீனப் பாதுகாப்பு அமைச்சர் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த சமயம் அவரின் வாகன அணி செல்வதற்காகப் போக்குவரத்துகள் மறிக்கப்பட்டன. அதை ஆட்சேபித்து தனது வாகனத்தில் இருந்தபடி ‘ஹோர்ன்’ சத்தம் எழுப்பி ஆட்சேபம் பக்கம்02 »

## இலங்கையில் நேற்று 1,891 பேருக்குக் ‘கொரோனா’ ஒரே நாளில் அதிகளவிலான தொற்றாளர்கள் பதிவு

இலங்கையில் நேற்று மாத்திரம் 1,891 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒரே நாளில் அதிகூடிய தொற்றாளர்கள் நேற்றுப் பதிவாகியுள்ளனர்.

கடந்த நான்கு நாள்களில் 6 ஆயிரத்து 800 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 11ஆயிரத்து 753 ஆக உயர்வடைந்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொற்றாளர்களில் 97 ஆயிரத்து 242 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 13 ஆயிரத்து 824 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## கொரோனாச் சாவு 696 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலனறுவை பிரதேசத்தைச் சேர்ந்த 51 ☞2

# சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி



## தமிழகத்தின் முதலமைச்சராக மே 9இல் ஸ்டாலின் பதவியேற்பு

தமிழகத்தின் ஆட்சியை கடந்த 10 ஆண்டு கால போராட்டத்துக்குப் பின்னர் மீண்டும் பிடித்திருக்கின்றது மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க.

சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 160 தொகுதிகளைக் கைப்பற்றி அமோக வெற்றியீட்டியுள்ளது. அ.தி.மு.க. கூட்டணி 74 தொகுதிகளை மட்டும் கைப்பற்றி தோல்வியடைந்துள்ளது.

தி.மு.கவின் மறைந்த தலைவர் மு. கருணாநிதியின் மகனான ஸ்டாலின் எதிர்வரும் மே 9ஆம் திகதி தமிழகத்தின் 8ஆவது முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ளார். ☞2

## இணைந்து செயற்படுவோம்!

### ஸ்டாலினுக்கு மோடி வாழ்த்து

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றுள்ளதையடுத்து அதன் தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்ட சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற மு.க ஸ்டாலினுக்கு வாழ்த்துகள் என்று பிரதமர் மோடி ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

தேசத்தின் வளர்ச்சியிலும் தமிழக மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதிலும் இணைந்து செயற்படுவோம். கொரோனா வைரஸ் தொற்று நோயைத் தோற்கடிக்க ☞2



## உண்மையாக இருப்பேன்!

### ஸ்டாலின் வாக்குறுதி

தமிழக மக்களே! எப்போதும் உங்களுக்கு உண்மையாக இருப்பேன். உங்களுக்காக உழைப்பேன்.

– இவ்வாறு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அது குறித்த நேற்று மாலை விசேட அறிக்கையொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்,

தமிழ்மொழிக்கும் – இனத்துக்கும் – நாட்டுக்கும் காவல் அரணாக உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆறாவது முறை ஆட்சியைச் செலுத்தக் கட்டளையிட்டுள்ள தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் இதயங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ☞2

## ஈழத் தமிழர் பிரச்சினைகளில் கரிசனைகொள்ள வேண்டும்!

### ஸ்டாலினுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பினார் சரா

தமிழகத்தின் சட்ட மன்றத் தேர்தலில் வெற்றியீட்டி தமிழகத்தின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு எமது வாழ்த்துக்கள். முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ☞2



## ஸ்டாலின் தலைமையில் தமிழக ஆட்சி தமிழினம் விடுதலை பெறும் வாய்ப்பு

### தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை நம்பிக்கை

தி.மு.க. தலைமையில் கூட்டணிக் கட்சிகள் பெரு வெற்றி பெற்றமை இலங்கைத் தமிழர்களுக்குப் பெரு மகிழ்ச்சியேதான் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் ஆட்சி அமைவதால் ☞2



## ஸ்டாலினுக்கு டக்ளஸும் வாழ்த்து!



தமிழக சட்டமன்றத் ☞2

## வீடுகளில் நிகழ்வுகளை நடத்தத் தடை; உறவினர் வீடுகளுக்கும் செல்லத் தடை

### இராணுவத் தளபதி அறிவிப்பு

நாட்டில் புதிய சுகாதார வழிகாட்டிக்கு அமைய தடை விதிக்கப்பட்டுள்ள கூட்டங்கள், விருந்துபசார நிகழ்வுகள் மற்றும் திருமண வைபவங்கள் உள்ளிட்ட நிகழ்வுகளை வீடுகளிலோ அல்லது வேறு இடங்களிலோ நடத்த முடியாது என இராணுவத் ☞2



## வடக்கில் 7 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 7 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்த இளைஞர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இதை அறிந்து முகப்புத்தகத்தில் ஒருவர் சீறியிருக்கின்றார்.

*"குண்டு வைத்தவர்களை (ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நடத்தியோரை) பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இப்போது 'ஹோர்ன்' சத்தம் எழுப்பியவரைக் கைது செய்யும் வேலையைச் செய்து கொண்டியிருக்கின்றார்கள்."* – என்று கிண்டலடித்திருக்கின்றார் அவர்.

வன்முறை – பயங்கரவாதம் – புரிந்தோரைக் கைது செய்வோம் என்று ஆட்சிக்கு வந்தோர் ஜனநாயக முறையில் எதிர்ப்புத் தெரிவிப்போரை கைது செய்யும் வேலையைத்தான் செய்கின்றார்கள். அந்த முகப்புத்தக நண்பன் சீற்றத்தில் நியாயம் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

★ ★ ★

தங்கப் பதக்கம் படத்தில் கவிஞர் கண்ணதாசனின் ஒரு பாடல். 'சோதனை மேல் சோதனை போதுமடா சாமி...' அந்தப் பாடலின் நடுவில் ஒரு நீண்ட வசனம் வரும்.

*"மாமா... காஞ்சுபோன பூமி எல்லாம் வத்தாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும். அந்த நதியே காஞ்சு போயிட்டா...? துன்பப் படுறவங்க எல்லாம் அந்தக் கவலையை தெய்வத்துக்கிட்ட முறையிடுவாங்க. ஆனா தெய்வமே கலங்கிநின்னா? அந்த தெய்வத்துக்கு யாரால் ஆறுதல் சொல்ல முடியும்...?"*

– இப்படிப் புலம்பும் நிலைக்கு இலங்கையைக் கொண்டு போய் விட்டிருக்கின்றது கொவிட் தொற்று.

கொவிட் தடுப்பு தயாரிப்பதிலும் உலக நாடுகளுக்கு விநியோகிப்பதிலும் முன்னணியில் நின்றது நமது பக்கத்து நாடு. இது விடயத்தில் வற்றாத நதியைப் போல காட்சியளித்த இந்தியாவிடமிருந்து தாராளமாக தடுப்பூசியை பெறலாம் என்ற நம்பிக்கையில் 9 லட்சம் தடுப்பூசி வரை முதற்கட்டமாகப் பெற்று மளமளவென்று தனது பிரஜைகளுக்கு ஏற்றியது இலங்கை.

தடுப்பூசி தயாரிப்பு விடயத்தில் வற்றாத நதியாகக் காட்சியளித்த இந்தியா இப்போது வறண்ட – காய்ஞ்சு போன – பூமியாகி விட்டது. அந்த நாட்டில் மோசமாகப் பரவி வரும் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு ரஷ்யாவில் இருந்து தடுப்பூசிகளை இறக்குமதி செய்கின்றது பாரதம். இந்தச் சீத்துவத்தில் இலங்கைக்கு எங்கேயிருந்து தடுப்பூசியை இந்தியா கொடுக்க முடியும்?

இதனால் இந்தியத் தடுப்பூசியை முதலாவது 'டோஸ்' ஆகப் பெற்றவர்களுக்கு இரண்டாவது 'டோஸ்' தடுப்பூசி வழங்க முடியாத இக்கட்டு இலங்கைக்கு.

முதல் 'டோஸ்' பெற்றவர்கள், உரிய காலத்தில் இரண்டாவது 'டோஸ்' பெற முடியாமல் போகும்போது முதல் 'டோஸ்' தடுப்பும் பலனற்று வீணாகப் போகும் நிலைமை.

சோதனை மேல் சோதனை போதுமடா சாமி..!

★ ★ ★

இலங்கையின் அரச நிர்வாகத்தில் தாரக மந்திரம் ஒன்று உண்டு. அது – 'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி' என்பதாகும்.

பரந்த கிரிக்கெட் மைதானத்தில் – அகன்ற, விசாலமான இடத்தில் – இருபது கிரிக்கெட் வீரர்களை வைத்துப் பயிற்சி நடத்திய 'குற்றத்துக்காக' பயிற்சியாளரும் வீரர்களும் தனிமைப்படுத்துலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். கொவிட் கட்டுப்பாட்டு விதிகளை நடைமுறைப்படுத்துவதில் நாங்கள் அவ்வளவு strict பாராட்டுக்கள்.

ஆனால் நாளை அலரிமாளிகையில் ஒரு கூட்டம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'கிராமத்துடன் உரையாடல்' திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட முடிவுகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான செயலணியின் தலைவர் என்ற முறையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இருபத்தியைந்து மாவட்டச் செயலாளர்கள், ஒன்பது மாகாண ஆளுநர்கள், ஒன்பது பிரதம செயலாளர்கள், அவர்களின் ஆளணியினர், இந்த செயலணியுடன் இணைக்கப்பட்டுள்ள மேலும் சில அமைச்சர்கள், அவர்களின் செயலாளர்கள் என நூறுக்கும் குறையாதோர் பங்குபற்றும் கூட்டம் இது.

பரந்த – விசாலமான – மைதானத்தில் இருபது பேர் கூடிப் பயிற்சி பெற்றால் தொற்றக் கூடிய கொரோனா வைரஸ், அலரி மாளிகையில் மூடிய மண்டபத்தில் நூறு பேர் கூடும் கூட்டம் என்றால் அலறி அடித்துக் கொண்டு அந்தப் பக்கமே தலை வைக்காமல் ஓடி ஒளித்துவிடும் போல...!

நல்ல திருவிழாதான் போங்கள்...! ஊருக்குத்தான் உபதேசம்...!

– மின்னல் –

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வயது ஆண், கெப்படிகொல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த 94 வயது ஆண், லெவல பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயது ஆண், தென்னேகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயது பெண், மத்தேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 86 வயது பெண், மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 87 வயது ஆண், கந்தளாய் பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயது ஆண், வரகாம்புர பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயது ஆண், பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயது ஆண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 696 ஆக அதிகரித்துள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

## இணைந்து செயற்படு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தேசிய ஜனநாயகக் கூட்டணியை ஆதரித்த தமிழக மக்களுக்கு நன்றி. மாநிலத்தின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றுவோம் எனவும், புகழ்பெற்ற தமிழ் கலாசாரத்தை மேலும் பிரபலப்படுத்துவோம் எனவும் குறித்த பதிவில் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## உண்மையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டுக்கு இயக்க ரீதியாகவும் – ஆட்சி ரீதியாகவும் உழைத்த நமது உழைப்புக்குக் கிடைத்த பாராட்டுப் பத்திரமாக நினைத்து இதனைப் பாதுகாப்பேன். நமது உழைப்புக்குத் தரப்பட்ட அங்கீகாரமாக இதனை நினைக்கின்றேன்.

எப்போதும் உங்களுக்கு உண்மையாக இருப்பேன். உங்களுக்காக உழைப்பேன். என்றென்றும் என் சிந்தனையும் செயலும் இந்நாட்டு மக்களுக்காகத்தான் இருக்கும்.

தமிழகத்தில் அமையப் போகும் கழக ஆட்சியானது, எத்தகைய கனவுகள் கொண்டதாக தமிழகம் அமைய வேண்டும் என்று நினைப்பவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்தப் போகும் ஆட்சியாகும்.

கழகம் வென்றது – அதைத் தமிழகம் இன்று சொன்னது. அதேபோன்று இனித் தமிழகம் வெல்லும். அதை நாளைய தமிழகம் சொல்லும் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஸ்டாலின் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கைத் தமிழரின் இனவிடுதலைக்கும் பேராதரவு கிடைக்கும் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம். இலங்கைத் தமிழினமும், தமிழர் தேசமும் விடுதலை பெறுவதற்கும் அனைத்துக் கட்சிகளுடனும் மத்திய அரசுடனும் இணக்கம் கொண்டு செயற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என நம்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப் பேரவை தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில், அந்தக் கூட்டணியின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து மாவை சோ.சேனாதிராஜா வெளியிட்டுள்ள செய்தியிலேயே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

தமிழகத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் மாபெரும் வெற்றிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திராவிட இயக்கத் தலைவர் தமிழ்நாட்டு மக்கள் தலைவர் கலைஞர் கருணாநிதியின் கொள்கை வழி நின்று எதிர்காலத்திலும் தலைவர், தளபதி முதலமைச்சர் ஸ்டாலின் தமிழகத்தின் வெற்றிக்கும் உழைத்திட இலங்கைத் தமிழர் தரப்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், வெற்றி பெறவைத்த மக்களுக்கும் எம் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றுள்ளது.

## சட்டமன்றத் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
1953ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி முத்துவேல் கருணாநிதி – தயாளு அம்மாள் தம்பதியரின் மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தார் மு க ஸ்டாலின்.

ரஷ்ய ஜனாதிபதி ஸ்டாலின் நினைவாக அவரது பெயரையே தன் மகனுக்கு சூட்டினார் கருணாநிதி.

சென்னை சேத்துப்பட்டில் உள்ள கிருத்துவ கல்லூரியில் பள்ளிப் படிப்பையும், விவேகானந்தா கல்லூரியிலும் மாநிலக் கல்லூரியிலும் கல்லூரிப் படிப்பையும் முடித்தார் ஸ்டாலின்.

பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, 1967ஆம் ஆண்டில் கோபாலபுரம் இளைஞர் திமுக என்ற அமைப்பை ஏற்படுத்தி அரசியலில் ஈடுபடலானார். அப்போது அவருக்கு 14 வயது மட்டுமே.

அப்போது முதல் படிப்படியாக சட்டமன்ற உறுப்பினர், சென்னை மேயர், உள்ளூராட்சித் துறை அமைச்சர், துணை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் என்று நீண்டு, பின்னர் தி.மு.கவின் தலைவராக ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டு, 2021 சட்டமன்றத் தேர்தல் முதல்வர் வேட்பாளர் என மிக நீண்ட நெடிய பயணத்தை அரசியலில் மேற்கொண்டிருக்கின்றார் ஸ்டாலின்.

கலையிலும் இருந்த மிகுந்த ஆர்வத்தால் அரசியலில் ஈடுபட்ட அதே காலகட்டத்தில் 'முரசே முழங்கு', 'திண்டுக்கல் தீர்ப்பு', 'நீதி தேவன் மயங்குகிறான்', 'நாளை நமதே' என திராவிடக் கொள்கைகளை விளக்கும் பல நாடகங்களிலும் அவர் நடித்துள்ளார்.

திரைத்துறையிலும் மக்கள் ஆணையிட்டால், ஒரே இரத்தம் ஆகிய படங்களிலும், குறிஞ்சி மலர் என்ற தொலைக்காட்சி நாடகத்திலும் ஸ்டாலின் நடித்தார்.

பின்னர் தீவிர அரசியலில் மட்டும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட மு.க. ஸ்டாலின், சென்னை மாவட்ட 75 ஆவது வட்ட பொறுப்பாளராக திமுகவில் முதல் கட்சி பதவியை வகித்தார்.

1968 ஆம் ஆண்டு நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.கவுக்காக கடுமையாகப் பிரசாரம் செய்ததைத் தொடர்ந்தே அவருக்கு இந்தக் கட்சிப் பதவி கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து 1973 இல் தி.மு.கவின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1979 இல் இளைஞர் அணி அமைப்பாளர்களில் ஒருவராகவும், 1983 இல் இளைஞர் அணி செயலாளராகவும், 2008இல் பொருளாளராகவும், 2017 செயல் தலைவராகவும் மு.க. ஸ்டாலின் பதவி வகித்தார்.

2018இல் தி.மு.க. தலைவர் கருணநிதியின் மறைவுக்குப் பின்னர் கட்சித் தலைவராக ஸ்டாலின் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டார்.

1976 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கொண்டுவந்த மிசா சட்டத்தின் கீழ் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டு ஓராண்டுக் காலம் சிறையில் அடைக்கப்பட்டார்.

1996ஆம் ஆண்டு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை மேயராக, முழுமையாக பதவி வகித்தார். சிங்காரச் சென்னை என்ற திட்டத்தையும் கொண்டு வந்தார்.

2001 ஆம் ஆண்டும் சென்னையின் மேயராகப் பதவி வகித்தார். அதே காலகட்டத்தில் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்ததால் தனது மேயர் பதவியை இராஜிநாமா செய்தார். இப்படி இருமுறை மேயராகப் பதவி வகித்தார் ஸ்டாலின்.

அதேநேரம் 1984ஆம் ஆண்டு சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் சட்டமன்றத்துக்கு முதல் முறை போட்டியிட்டு தோல்வி கண்டார். 1986 ஆம் வருடம் அதே ஆயிரம் விளக்கு தொகுதியில் வெற்றி பெற்றார்.

மீண்டும் 1991 இல் அதே தொகுதியில் தோல்வியும், பின்னர் 1996, 2001 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் வெற்றியும் பெற்ற ஸ்டாலின், 2011 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் சென்னை கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்றத்துக்குத் தேர்வானார்.

தற்போது 2021 சட்டமன்றத் தேர்தலிலும் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதல்வராக வாகை சூடியுள்ளார். 2006இல் தி.மு.க ஆட்சிக்கு வந்தபோது உள்ளூராட்சித்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

தமிழகத்தின் முதல் துணை முதலமைச்சராக 2009 ஆம் ஆண்டிலும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக 2016 ஆம் ஆண்டிலும் பதவி வகித்தார் ஸ்டாலின். அப்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 89.

குடும்ப அரசியல், ஊழல், நில அபகரிப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கும் விமர்சனங்களுக்கும் நடுவே, தி.மு.க. இம்முறை ஆறாவது தடவையாக தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்திருக்கின்றது.

(மற்றொரு செய்தி 10ஆம் பக்கத்தில்...)

## வீடுகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

## ஈழத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மு.க.ஸ்டாலின், ஈழத் தமிழர் விடயத்திலும், தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள ஈழத் தமிழர்கள் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் அவா.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தமிழக சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியான நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றியீட்டியுள்ளது. அதன் தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ளார். அவருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:–

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பெரு வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. ஈழத் தமிழ் மக்கள் சார்ப்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். புதிதாக தமிழகத்தில் உதித்துள்ள ஆட்சி ஈழத் தமிழர்கள் பிரச்சினைகளில் ஆத்மார்த்தமாகச் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம், அவாக் கொண்டுள்ளோம்.

தேர்தல் காலங்களில் ஈழத் தமிழர் பிரச்சினை தமிழக கட்சிகளால் அதிகம் பேசப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகமும் ஈழத் தமிழர்கள் பிரச்சினைகள் தொடர்பில் பேசியிருந்தது. எதிர்காலத்தில் ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், உரிய சந்தர்ப்பங்களில் அழுத்தங்களையும் கொடுக்க வேண்டும் என்றும் அன்புரிமையோடு கோருகின்றோம் – என்றுள்ளது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உறுதி செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 478 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 7 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் 2 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர்.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் இருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

பூவரசம்குளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒரு நோயாளிக்கு தொற்று கண்டறியப்பட்டது.

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டது – என்றார். (100)

## ஸ்டாலினுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தேர்தலில் அமோக வாக்குகளைப் பெற்ற தி.மு.கவுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்துத் தெரிவித்தார்.

கிளிநொச்சி, பூநகரியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த தமிழ்நாட்டு தேர்தலை எடுத்துக்கொண்டால் தி.மு.க. அதிகவாக்குகளைப் பெற்றுள்ளது. அந்தவகையில் முதலமைச்சராக ஸ்டாலின் பதவியேற்கவுள்ளார்.

அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எமது மக்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்ற அதேநேரத்தில், இலங்கையின் வடக்கு மாகாண கடற்தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கும் அவர் தீர்வு தருவார் என்றும் நம்புகின்றேன் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் வறுமை நிலைக்குக் காரணம் அரசியல் தலைவர்களின் செயல் திறனின்மையே!

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 03

கிளிநொச்சி மாவட்டம் வறுமை மாவட்டமாக இருப்பது அரசியல் தலைமைகளின் செயற்றிறன் இன்மையே மாவட்டத்தின் வறுமை நிலைக்குக் காரணம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு தொடர்ந்தும் பதிலளிக்கையில் -

கணிசமானளவு விவசாயத்தை மையப்படுத்திய கிளிநொச்சி மாவட்டத்தில் போதிய திட்டமிடப்பட்ட வகையில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்படாதமையே வறுமை தொடர்வதற்குக் காரணம். யுத்தம் நிறைவடைந்து பன்னிரண்டு வருடங்களாகின்ற நிலையில் அதிகாரதத்தைப் பெற்றுக்கொண்ட அரசியல் தலைமைகள் விவசாயத்தை விருத்தி செய்து வறுமை ஒழிப்பது தொடர்பான சாத்தியங்களைப் பற்றி அக்கறையின்றி செயற்பட்டனர்.

இதேநேரம் மக்களை உசுப்பேற்றி தவறாக வழிநடத்துவதில் ஆர்வம் செலுத்தியமையே வறுமை நீடிப்பதற்கு காரணம். தற்போது விவசாய நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கான ஏதுநிலைகள் தொடர்பாக கவனம் செலுத்துவது மற்றும் கிடைக்கும் அறுவடைகளுக்கு



சிறந்த சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. - என்றார்.

## மல்லாவி வைத்தியசாலை ஊழியர் ஒருவருக்கு தொற்று

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மல்லாவி வைத்தியசாலை ஊழியர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மல்லாவி வைத்தியசாலையில் பணிபுரியும் 47 வயதுடைய ஊழியர் ஒருவருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான நபர் கிளிநொச்சி கொவிட் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து குறித்த நபருடன் தொடர்புகளைப் பேணியவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளமையோடு அவர்களைத் தனிமைப் படுத்தும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

## காசோலை மோசடி நால்வர் கைது

காசோலை மோசடி தொடர்பில் 4 சந்தேக நபர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் போலியான காசோலைகளைப் பயன்படுத்தி தனியார் வங்கியொன்றில் இருந்து 4 கோடியே 30 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

தனியார் இரும்புக் கம்பி உற்பத்தி தொழிற்சாலை ஒன்றின் பெயரில் சந்தேகநபர்கள் குறித்த போலி காசோலையை தயாரித்து பணம் பெற்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மஹிந்தானந்த சுயதனிமையில்



அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரின் சாரதி மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அமைச்சர் இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மேலும், அமைச்சருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கொட்டகலையில் கோர விபத்து: ஒரே குடும்பத்தில் மூவர் காயம்

நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் சனிக்கிழமை இரவு கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோரே இவ்வாறு காயமடைந்து சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பகுதியில் இருந்து ஹற்றன் நோக்கி சென்ற வான் ஒன்று, கொட்டகலை பகுதியிலிருந்து கொமர்ஷல் பகுதியை நோக்கி சென்ற ஓட்டோவுடன் பின்புறத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. வான், ஓட்டோவுடன் மோதிய பின், ஓட்டோ வீதியை விட்டு விலகி அருகில் இருந்த கற்பாறையுடன் மோதி பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

வான் சாரதி திம்புள்ள பத்தனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹரின் எம்.பிக்கு வெற்றிகரமாக இருதய அறுவை சிகிச்சை நடந்தது



கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவிற்கு இருதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றில் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டிருந்த நிலையில், அது கொழும்பு அரசியலில் பேசுபொருளாக மாறியது.

இந்நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கைது செய்யப்பட இருக்கிறார் என அந்த நேரத்தில் பரவலாகப் பேசப்பட்டது.

இதனையடுத்து, கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் ஹரின் பெர்னாண்டோ சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டார். இந்நிலையில், அவருக்கு இருதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'பிரபல இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தலைமையிலான அற்புதமான குழுவினருக்கு எனது நன்றிகள். சிக்கலான சிகிச்சை, இதற்கு வெளிநாட்டு சிகிச்சை தேவை.

எனினும், இந்த சிறந்த குழுவினரால் உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்டது. கடவுளுக்கும் நன்றி' - என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## போலி இலக்கத்தகடு, ஹெரோயினுடன் சந்தேக நபர்கள் நான்கு பேர் கைது

கல்முனை - மருதமுனை பகுதியில் போலி வாகன இலக்க தகடுகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது போலி இலக்கத்தகடுகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது விசேட அதிரடிப்படையினரால் சந்தேகத்திற்கிடமான வான் ஒன்று நிறுத்தி சோதனைக்குட்படுத்தப்பட்ட போது, அதிலிருந்து போலி இலக்கத்தகடுகள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் ஏதேனும் குற்றச் செயலில் ஈடுபடுவதற்காக இந்த இலக்கத் தகடுகளை வைத்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

இதே வேளை கார் ஒன்றும் இவ்வாறு சோதனைக்குட்படுத்தப்பட்ட போது அதிலிருந்து 3 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதோடு, காரில் பயணித்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை, தெஹிவளை மற்றும் கிராண்ட்பாஸ் பகுதிகளைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் பயன்படுத்திய வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## கொழும்பு வெள்ளவத்தையில் மீண்டும் கொவிட் அச்சுறுத்தல்

### 15 பேருக்குத் தொற்று உறுதி

கொழும்பில், கோவிட் தொற்றால் கெஸ்பேவ, கொம்பனித்தெரு மற்றும் வெள்ளவத்தை ஆகிய இடங்களில் உள்ளவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொவிட் தொற்றைத் தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவின்படி , கொழும்பு மாவட்டத்தில் மேலும் 317 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 94 பேர் கொழும்பு மாநகர சபை எல்லையிலும், 223 கொழும்பு மாவட்டத்தின் பிற பகுதிகளையும் சேர்ந்தவர்கள். கெஸ்பேவயில் 51 பேரும், கொம்பனித்தெருவில் 15 பேரும், வெள்ளவத்தையில் 15 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை குருநாகல், கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தளை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலேயே ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## மகனின் விடுதலைக்காக காத்திருந்த தந்தை சாவு



மகனின் விடுதலையை எதிர்பார்த்து 12 வருடங்களாகக் காத்திருந்த தமிழ் அரசியல் கைதியின் தந்தை ஒருவர் உடல் நிலை பாதிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். தந்தையின் இறுதிச் சடங்கில் கூட மகன் கலந்து கொள்ள முடியாதமையால் உறவுகள் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் வீதியை சேர்ந்த எஸ்.இராசவல்லவன் (வயது 79) என்பவரே உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.'

சுன்னாகத்தைச் சேர்ந்த இராசவல்லவன் தபோருபன் (வயது 39) பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அவருக்கான வழக்கு இடம்பெற்று கடந்த 2019 ஆம் ஆண்டு சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

மகன் கைது செய்யப்பட்ட பின்னர் தந்தை மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தமையுடன் நாளுக்கு நாள் அவரின் உடல் நிலையும் பாதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், மகனின் விடுதலைக்காக இவர் பல முயற்சிகளை மேற்கொண்டும் பயன் கிடைக்கவில்லை. மகனின் தண்டனைக்காலம் இன்னும் சில ஆண்டுகளில் முடியவுள்ள நிலையில் தந்தையார் உயிரிழந்தமை உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஆவார்.

இதுவரை சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை எதிர்பார்த்திருந்த அவர்களின் உறவுகள் 17 பேர் வரையில் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழகத்தின் புதிய ஆட்சியை நாம் வாழ்த்தி வரவேற்போம்!

## மனோ எம்.பி. அறிக்கை



தமிழகத்தின் ஆளும் கட்சியையும், தமிழக முதல்வரையும் வாழ்த்தி வரவேற்கத் தயாராகுவோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தமிழகத் தேர்தல் முடிவுகளில் நேரடியாகத் தலையிட, நாம் அங்கே வாக்காளர்கள் அல்ல. ஆனால், அது பற்றி நாம் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் இலங்கை எமது தாய்நாடு. இந்தியத் தமிழகம் எங்கள் தந்தையர் நாடு.

அறிஞர் அண்ணா உருவாக்கி, மறைந்த முன்னாள் முதல்வர், கலைஞர் முத்துவேலு கருணாநிதி வளர்த்து விட்ட திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி. ராமச்சந்திரன் உருவாக்கி, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் வளர்த்து விட்ட அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்துக்கும் இடையில்தான் ஆரம்பத்தில் இருந்தே பிரதான போட்டி. ஏனைய அனைத்து கட்சிகளும் துணை அரசியல் பாத்திரங்களையே வகிக்கின்றன.

தமிழக உடன் பிறப்புகள் தரும் ஜனநாயக முடிவுகளை ஏற்று அதை எப்படி எமக்கு பயனுள்ளதாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதை மட்டுமே, இலங்கையில் நாம் கணிக்க வேண்டும்.

மற்றபடி, தேர்தல் காலத்திலும் சரி, இன்றைய முடிவுகளின் போதும் சரி, தமிழக அரசியல் கட்சிகளை பற்றி, தமிழக அரசியல் தலைவர்களை பற்றி, தரக்குறைவாக பண்பற்று பேசி எமது உணர்வுகளை நாம் கொட்டக்கூடாது.

அப்படி ஆத்திரப்படும் அளவுக்கு, நமது நாட்டு தமிழ் அரசியல் தலைமைகளும், வரலாறு முழுக்க ஏதோ பிழையே செய்யாத அதி உத்தம யோக்கியர்களுமல்ல என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும். இந்தியா தொடர்பில் நமது கட்சிகள், அமைப்புகள் பல தவறுகளை வரலாற்றில் செய்துள்ளன.

இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழர் பிரச்சினை என்பது, தமிழக மக்கள் முன்னாலே உள்ள பல்வேறு பிரச்னைகளில் ஒன்றாகும். அங்கு வாழும் சுமார் எட்டு கோடி தமிழர், எமது உடன்பிறப்புகள். அந்த எட்டுக் கோடி என்பது எமது பாதுகாப்புக் கவசம்.

கடந்த காலங்களில் அந்த பாதுகாப்புக் கவசம் சரியாகப் பயன்படாமல் போய்விட்டது. இதற்கான காரணங்கள் பல. அவற்றை ஆராய்வது இப்போது உசிதமானதல்ல.

ஆகவே, கடந்த காலங்களை மறந்து விட்டு, தமிழகத்தின் ஆளும் கட்சியையும், தமிழக முதல்வரையும் வாழ்த்தி வரவேற்போம். - என்றுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சீன வலையில் இந்தியா

ஆசியாவில் அதிகரித்து வரும் சீனாவின் பிரசன்னம் குறித்து கொழும்புத் தமிழ் வார இதழ் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள இந்திய இராணுவத்தின் முன்னாள் மூத்த அதிகாரி ஒருவர், சீனாபின் கதவின் ஊடாக அதிகார பலத்தைக் காண்பித்து இந்தியாவை அச்சுறுத்த முற்படுகின்றது என்று கூறியிருக்கின்றார்.

1971 முதல் 2008 வரையில் இந்திய இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.டி.பக்ஷியே இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

சீன ஆதிக்க வலைக்குள் இந்தியா எவ்வளவு தூரம் மோசமாகச் சிக்குப்பட்டிருக்கின்றது என்பதை அவர் கோடி காட்டியிருக்கின்றார். மிக மோசமான ஆபத்து நிலையை பாரதம் எதிர்கொண்டிருக்கின்றது என்பது அவரது தகவல்கள் ஊடாகக் கண் கூடாகத் தெரிகின்றது.

தெற்காசியாவில் சீனாவின் பினாமியாக பாகிஸ்தான் செயற்படுவதாக அவர் சுட்டுகின்றார்.

அணு ஆயுத உற்பத்தி விவகாரத்தில் சீன – பாகிஸ்தான் கூட்டு பாரதத்துக்குப் பேராபத்து என்பதைக் கோடி காட்டுகின்றார் அவர்.

*"சீனா, பாகிஸ்தானுடன் இராணுவ ரீதியாக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கின்றது. பாகிஸ்தானே அணுவாயுதத் தொழில்நுட்ப இரகசியங்களையும், செறிவூட்டிய யுரேனியத்தையும் சீனாவுக்கு வழங்கியுள்ளது. அத்துடன் பாகிஸ்தான் தயாரித்த முதலாவது அணுவாயுதம் உட்பட ஏனைய அணுவாயுதங்களையும் சீனாவே பரிசோதித்துள்ளது. அதேநேரம் சீனா பாகிஸ்தானில் உயிரியியல் ஆயுத ஆய்வுகூடங்களை அண்மைக்காலமாக நிறுவி வருகின்றது."* – என்று அவர் வெளியிட்டிருக்கும் திடுக்கிடும் தகவல்கள் உண்மையானால், அது இந்தியாவுக்கு மாத்திரம் அச்சுறுத்தல் அல்ல, இந்து சமூத்திரப் பிராந்தியத்துக்கே பெரும் அச்சுறுத்தலாகும்.

அணு ஆயுதத் தளபாடங்களை சீன உதவியுடன் பாகிஸ்தான் விருத்தி செய்யுமானால், பாகிஸ்தான் இது விடயத்தில் அகலக்கால் வைப்பதை அமெரிக்கா போன்ற சர்வதேசத் தரப்புகளினால் கூடத் தடுக்க முடியாமல் போகும். பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் சீனாவில் பரீட்சிக்கப்படுமானால், பாகிஸ்தானின் அத்தகைய நடவடிக்கைகளை சர்வதேசம் கண்டுபிடித்து அடையாளப்படுத்துவதோ, தடைகளை விதித்துக் கட்டுப்படுத்துவதோ கூட சாத்தியமற்றே போய்விடும்.

பாகிஸ்தானை பினாமியாகப் பயன்படுத்தும் சீனாவின் இந்தத் திட்டம் இந்தியாவின் வட முனையில் அதற்கு (இந்தியாவுக்கு) வைக்கப்படும் மிகப் பெரும் ஆப்பாகும்.

அதே ஆப்பை இந்தியாவின் தென்முனையிலும் இந்தியாவுக்கு வைப்பதற்கு அதன் தெற்கு அயல்நாடான இலங்கையும் துணை போகின்றதா என்பதுதான் இப்போதுள்ள பிரதான கேள்வியாகும்.

நாடுகளுக்குக் கடன் தேவைகளை உருவாக்கி, அந்தப் பொறியில் விழவைத்து, பின் வளைத்துப்போட்டுத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது சீனாவின் வழமையான தந்திரோபாயம் தான் என்கின்றார் மேஜர் ஜெனரல் ஜி.டி.பக்ஷி.

கடன் பொறி விதிக்கும் சீனாவின் வலையில் வசமாகக் சிக்கிய முதல் நாடாக இலங்கை உள்ளது என்கின்றார் அவர்.

கடன்களை வழங்கி அம்பாந்தோட்டை துறைமுகத்தை ஸ்தாபிக்கச் செய்த சீனா, கடைசியில் இலங்கைக்கு கடனிறுக்க முடியாத நிலையை ஏற்படுத்தி, அதனைத் துரும்பாகக் கையாண்டு, அதே அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த தந்திரத்தை அவர் விளக்குகின்றார்.

அந்தச் செயற்பாட்டின் தொடர் நடவடிக்கையாக இப்போது இலங்கைத் தீவையே சீனாவின் கொலனியாக மாற்ற பீஜிங் முயல்கின்றது என்கிறார் அவர்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கையகப்படுத்தியுள்ள சீனா தொடர்ந்து மியன்மார், மாலைதீவு, பாகிஸ்தான் துறைமுகங்களையும் கூட்டிணைத்து இந்தியாவைச் சூழ கடற் பிராந்தியத்தில் ஒரு வலை விரித்து வருகின்றது என்பது இந்தியாவுக்கு நன்கு தெரியும்.

சூழ இருக்கும் அயல்நாடுகள் இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமாக இந்த அமிலச் சோதனைக்கு தெரிந்தோ, தெரியாமலேயே துணை போகின்றமை இந்தியாவுக்கு உள்ள பெரும் பின்னடைவு நிலைமையாகும்.

*"இந்தப் போக்குத் தொடர்வதற்கு இடமளிக்க முடியாது. சீனாவின் இத்தகைய முயற்சி முறியடிக்கப்பட வேண்டும். கட்டுப்படுத்தப்பட வேண்டும்"* – என்று மேஜர் ஜெனரல் பக்ஷி கூறுவது நியாயமானதும், சரியானதும்தான்.

ஆனால், அதனை இந்தியா எப்படி சாதிக்கப்போகின்றது என்பதுதான் கேள்வி.

இலங்கை விடயத்தில் கூட தனக்கு உண்மையான நண்பனான – தொப்புள் கொடி உறவான – தமிழர் தரப்பை கவனியாது கைவிட்டுவிட்டு, மறுபுறத்தில் சீனாவுடன் கரங்கோர்த்து நிற்கும் கபட எதிரியான தென்னிலங்கை பௌத்த – சிங்களப் பேரினவாத அரசுடன் தோளில் கைபோட்டுச் செயற்படுகின்றது புதுடில்லி.

மீண்டும் சொல்கிறோம், இலங்கையில் தனது சரியான நண்பன் யார், கபட எதிரி யார் என்பதை புதுடில்லி உரிய முறையில் அடையாளம் கண்டு, தன்னைத் திருத்தாத வரை இந்தப் பேராபத்திலிருந்து பாரதம் விடுபடுவது என்பது சாத்தியப்படப் போவதில்லை.

# ரயில்வேத் தொழிற்சங்கங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு



கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கருத்திற் கொண்டு அலுவலக சேவை நேரத்தின் போது அரச பஸ்களை அதிகளவில் சேவையில் ஈடுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெருக்கடியான சூழ்நிலையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக குறிப்பிடப்படும் ரயில்வேத் தொழிற்சங்கங்களுக்கு எதிராக இம்முறை கடுமையான சட்ட நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் பொது போக்குவரத்து சேவை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்த கொவிட் - 19 வைரஸ் தாக்கம் புத்தாண்டு காலத்திற்கு பிறகு சடுதியாக அதிகரித்துள்ளது. இதற்கு அனைத்து தரப்பினரும் பொறுப்பு கூற வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிகொள்ள சுகாதார தரப்பினர் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் அனைவரும் அரசியல் கட்சி பேதங்களைத் துறந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அரச மற்றும் தனியார் பஸ் சேவை மற்றும் ரயில் சேவைகளில் பயணிகள் ஆசன அடிப்படையில் மாத்திரம் பயணம் செய்ய வேண்டும் எனக் கட்டாயமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது போக்குவரத்து சேவையில் சமூக இடைவெளியைப் பேணுவது தற்போது வரை சாத்தியமற்றதாக காணப்படுகிறது.

காலை மற்றும் மாலை அலுவலக சேவை நேரத்தில் பொதுமக்கள் பொது போக்குவரத்து சேவையை அதிகளவில் பயன்படுத்துகிறார்கள்.

இவ்வாறான நிலையில் பஸ்ஸுக்குள் சமூக இடைவெளியைப் பேணுவது சாத்தியமற்றதாக உள்ளது. ஆகவே அலுவலக சேவைக்கு அரச பஸ்களைப் வழமைக்கு மாறாக அதிகரிக்கவும், காலை மற்றும் மாலை பஸ் குறுகிய தூர பஸ் போக்குவர்து சேவையின் நேர அட்டவணையில் மாற்றம் ஏற்படுத்தவும் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானம் இந்த வாறம் முதல் அமுல்படுத்தப்படும்.

ஒரு சில ரயில்வேத் தொழிற்சங்கத்தினர் எதிர்வரும் 5 ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுப்படவுள்ளனர் எனவும் அறிய முடிந்துள்ளது. நெருக்கடியான சூழ்நிலையில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை தொழிற்சங்கத்தினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

காணப்படும் பிரச்சினைகளுக்கு பேச்சு ஊடாகத் தீர்வு காண முடியும். முறையற்ற வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிற்சங்கத்தினருக்கு எதிராக இம்முறை கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

# விமான பயணிகள் எண்ணிக்கையை 75 ஆக மட்டுப்படுத்தியது இலங்கை

## விமான நிறுவனங்களுக்கும் அறிவிப்பு

இலங்கைக்கான விமான சேவையில் ஈடுபடும் அனைத்து விமான நிறுவனங்களும் தமது பயணிகளின் எண்ணிக்கையை 75 ஆக மட்டுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொவிட் - 19 நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

18




# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

கொவிட் – 19 தொற்றுநோயின் விளைவாக, அதிகமான பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் மெய்நிகர் அல்லது மெய்நிகர் கலந்த கலப்பு கற்றலுக்கு மாறியுள்ளன. மெய்நிகர் கற்றலுக்குத் தேவையான வசதிகளை உள்ளடக்கியதாக பல மென்பொருள்கள் உருவாக்கப்பட்டு புழக்கத்தில் உள்ளன. ஆனால், இலங்கை போன்ற நாடுகளில் ஒருசில செயலிகளே பிரபல்யமடைந்து காணப்படுகின்றன. வணிக நோக்கம் கருதி பல சிறந்த செயலிகள் அறிமுகமாகாது புறம்மொதுக்கப்படுவதான சூழலையும் அவதானிக்க முடியும். இந்த வகையில் மிகச்சிறப்பாக கற்றல் செயல்முறைக்காகவே உருவாக்கப்பட்ட செயலிகளைத் தொடர்ந்து இந்தத் தொடரில் பார்க்கலாம்.

Schoology (ஸ்கூ– லு– ஜீ) என்பது மெய்நிகர் கற்றலுக்கான ஓர் இணையவழி மென்பொருளாகும்.

ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான மெய்நிகர் கற்றல் சூழல் மற்றும் சமூக வலைப்பின்னல் சேவை எனலாம். இது பயனர்களை கல்வி உள்ளடக்கத்தை உருவாக்க, நிர்வகிக்க மற்றும் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறது. கற்றல் மேலாண்மை அமைப்பு (எல்.எம்.எஸ்.) அல்லது பாடநெறி மேலாண்மை அமைப்பு (சி.எம்.எஸ்.) என்றும் இது அழைக்கப்படுகிறது, இதில் கிளவுட் கம்ப்யூட்டிங் சார்ந்த தளம் ஒரு மெய்நிகர் வகுப்பறைப் பாடத்தை நிர்வகிக்க தேவையான கருவிகளை வழங்குகிறது.

ஸ்கூ–லு–ஜீயில் தினசரி நினைவூட்டல்கள் அல்லது புதுப்பிப்புகளை இடுகையிடுவதன் மூலமும், மாணவர்களுக்கு நேரடியாகச் செய்தி அனுப்புவதன் மூலமும், திட்டமிடப்பட்ட பணிகளை நிர்வகிப்பதன் மூலமும் தொலைதூர வகுப்புகளை நிர்வகிக்க ஆசிரியர்களை எல்.எம்.எஸ். அனுமதிக்கிறது. வினாடி வினாக்கள், படிவங்கள், வலைத்தளங்கள், வீடியோக்களுக்கான இணைப்புகள் மற்றும் மாணவர்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதற்கான விவாதங்கள் ஆகியவை அடங்கும். மாணவர்கள் 13 டிஜிற்றல் இலக்க அணுகல் குறியீட்டைப் பயன்படுத்தி ஒரு பாடத்திட்டத்தில் சேரலாம் அல்லது ஆசிரியரால் நேரடியாக ஒரு வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படலாம். பொதுவாகச் சொல்வதானால் கல்விக்காக ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கான படிப்புகளை உருவாக்க மற்றும் நிர்வகிக்க அனுமதிக்கும் ஒரு தளமாகும். கற்றலுக்கு தேவையான பெரும்பாலான கருவிகளை ஒரே மேடையில் இணைப்பதன் மூலம் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறையை இது எளிதாக்குகிறது. பாடநெறிகளை நிர்வகித்தல், மாணவர்களை ஈடுபடுத்துதல், உள்ளடக்கத்தைப் பகிர்வது மற்றும் பிற கல்வியாளர்களுடன் தொடர்புகொள்வது, தகவல்தொடர்புக்கான வசதி போன்ற வசதிகளைக் கொண்டுள்ளது.

வொஷிங்டன் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கட்டமைக்கப்பட்ட ஸ்கூ – லு – ஜீ வணிக ரீதியாக ஓகஸ்ட் 2009 இல் வெளியிடப்பட்டது. ஒக்டோபர் 2019 நிலைவரப்படி, 60,000இற்கும் மேற்பட்ட பள்ளிகளில் இந்த சேவை பயன்படுத்தப்பட்டது. கொவிட் பெருந்தொற்றுக்காரணமாக இதன் பயன்பாடு 400 வீதம் வரை அதிகரித்துள்ளதாக அறிய முடிகிறது.

ஸ்கூ – லு – ஜீ இல் கற்பிப்பதற்கான பல்வேறு வசதிகள் காணப்படுகின்றன.

**1. பாடநெறி வடிவமைப்பு வசதி :**

பயிற்றுவிப்பாளர்களுக்கு விரைவாக பாடங்களை உருவாக்குவதற்கான பாடநெறி வடிவமைப்பு அம்சங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. பயிற்றுநர்கள் வினாடி வினாக்கள், கலந்துரையாடல் பலகைகள் மற்றும் பலவற்றை இதற்காகப் பயன்படுத்தலாம் ஒவ்வொரு பணிக்கும் ஒரு தர நிர்ணயத்தை உருவாக்கிக் கொள்ளமுடியும். சிறப்பித்தல் மற்றும் சிறுகுறிப்பு போன்ற பல்வேறு தர நிர்ணயக் கருவிகள் இதில் கிடைக்கின்றன. கற்றல் நோக்கத்தை நிர்ணயம் செய்து இந்த தர நிர்ணயத்தை மேற்கொள்ளலாம்.

**2. தகவல் தொடர்பு வசதி :**

தகவல் தொடர்பு என்பது வகுப்பறைக்கு அப்பால் செல்கிறது. இதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட அனைவருக்கும் கணினி வழியாக செய்தி அனுப்புதல். கூடுதலாக, ஒவ்வொரு பாடத்திலும் கற்பவர்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள ஓர் உள்ளமைக்கப்பட்ட விவாதக் குழு உள்ளது. அனைத்து படிப்புகளும் ஒரு கோப்புறை முறையைப் பயன்படுத்தி சேமிக்கப்படுகின்றன. மேலும் அவை பொதுக் குழுவில் அல்லது பிற ஆசிரியர்களுக்குப் பயன்படுத்தக்கூடிய ஆதாரமாக பகிரப்படலாம்.

**3. தரவு, பகுப்பாய்வு மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட கற்றல்:**

ஒவ்வொரு கற்பவரின் முன்னேற்றத்தையும் கண்காணிக்க பயிற்றுநர்கள் முன்பே ஏற்றப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தலாம். வினாடி வினாக்களில் முடிவை பயிற்றுநர்கள் ஒவ்வொரு மாணவரின் மதிப்பெண்களையும் குழுவிற்கான புள்ளி விவர சராசரிகளையும் காணலாம். கற்பவர்கள் குறித்த முழுமையான முன்னோக்கைப் பெறுவதற்கு உயர் மட்ட பகுப்பாய்வுகளும் இதில் கிடைக்கின்றன.

**4. ஒத்திசைவுத் தன்மை:**

எவர்னோட், கூகிள் டிரைவ், யூடியூப் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல பயன்பாடுகளை ஸ்கூ – லு – ஜீ யுடன் ஒருங்கிணைக்க முடியும். மாணவர் தகவல் அமைப்புகள் (எஸ்.ஐ.எஸ்.) மற்றும் எல்.எம். எஸ். இடையே தரவைப் பகிர்ந்தால், தகவல் தானாக மேலே குறிப்பிட்டவற்றுடன் ஒத்திசைக்கப்படும்.

**5. மதிப்பீட்டு மேலாண்மை:**

ஸ்கூ – லு – ஜீ இன் சமீபத்திய வளர்ச்சி மதிப்பீட்டு மேலாண்மை தளம் தரங்களைத் தீர்மானிக்க படிப்புகளின் அடிப்படையில் மதிப்பீட்டு குழுக்களை உருவாக்கலாம். மேலும், ஒரே நேரத்தில் பல படிப்புகளுக்கு விண்ணப்பிக்க தரங்களை எளிதாக புதுப்பிக்க முடியும். பயிற்றுநர்கள் மதிப்பீடுகளைத் தானாகவே புதுப்பித்து அவற்றை மைய களஞ்சியத்தில் சேமிக்க முடியும். படங்கள் மற்றும் வீடியோக்களுடன் மாறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி பல திறன்களைப் பற்றி மாணவர்களைச் சோதிக்கும் மதிப்பீடுகளை புதிய கருவிகள் அனுமதிக்கின்றன. இதற்காக திரையின் மேற்புறத்தில் மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன – படிப்புகள், குழுக்கள் மற்றும் வளங்கள். எங்கிருந்தாலும் இந்த சிறந்த வழிசெலுத்தல் எப்போதும் கிடைக்கும்.

**6. முகப்பு பக்கம்**

ஒவ்வொரு முறையும் நீங்கள் ஸ்கூ – லு – ஜீ உள்நுழைவதைத் தொடங்குவதே உங்கள் முகப்புப் பக்கம். உங்கள் முகப்பு பக்கத்தில் இரண்டு முக்கிய தாவல்கள் உள்ளன. சமீபத்திய செயல்பாடு மற்றும் பாடநெறி போர்டு. உங்கள் விருப்பத்தைப் பொறுத்து, சமீபத்திய செயல்பாட்டு தகவல் வெகுஜன செய்திகளை அனுப்புவதற்கும், புதுப்பிப்புகளை இடுகையிடுவதற்கும், அட்டவணை, நிகழ்வுகளை உருவாக்குவதற்கும் சரியானது. மேலும் பாடநெறி போர்டு படிப்புகளில் நேரடியாக குதிக்க சரியானது.

ஸ்கூ–லு–ஜீ இல் தனிப்பட்ட கற்றல் சமூகங்களை (பி.எல்.சி.) உலக அளவில் உருவாக்க அல்லது விரிவுபடுத்துவதற்கான சிறந்த வழியாகும். குழுக்கள் வசதி உள்ளது. குழுக்கள் தொடர்பு, ஒத்துழைப்பு மற்றும் வள பகிர்வு என்பனவற்றிற்கு அதிக வாய்ப்புள்ளது. மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்களுக்காக அவை அமைக்கப்படலாம். அனைத்து உறுப்பினர்களும் பல்வேறு நோக்கங்களுக்காக ஒன்றிணைந்து செயல்பட இது உதவுகிறது. ஸ்கூ – லு – ஜீ இல் வளங்கள் பகுதி காணப்படுகிறது. இது அறிவுறுத்தல் மற்றும் பகிரப்பட்ட குழு பொருள்கள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ள மையப்படுத்தப்பட்ட இடமாகும். இது கோப்புகள், பணிகள், மதிப்பீடுகள், கற்றல் முடிவுகள் அனைத்தையும் நிர்வகிக்கக்கூடிய இடமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, இது வரம்பற்ற சேமிப்பிடத்தைக் கொண்டுள்ளது. இங்கு கோப்புகளை இறக்குமதி செய்யலாம், புதிய ஆதாரங்களை உருவாக்கலாம், அவற்றை எந்தவொரு அல்லது அனைத்து படிப்புகளிலும் விரைவாக நகலெடுக்கலாம் அல்லது நகர்த்தலாம். குழுக்களுடன் வளங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் மற்றும் அவற்றை பொது வளப் பகுதியிலிருந்து பதிவிறக்கலாம்.

எனது வளங்கள் – இது உங்கள் தனிப்பட்ட மற்றும் பகிரப்பட்ட வள சேகரிப்புகள் (சேகரிப்புகள் வெவ்வேறு தாக்கல் பெட்டிகளைப் போன்றவை). நீங்கள் இங்கே சேகரிப்புகளுக்கு இடையில் மாறலாம்

மேலும் ஸ்கூ – லு – ஜீ யில் தனிப்பட்ட விவரங்களை சேமித்துக் கொள்ளும் வசதியும் உள்ளது. மேல் வலது மூலையில், கீழ்நோக்கி எதிர்கொள்ளும் அம்புடன் பயநரின் பெயரைக் காணலாம். அங்கு காணப்படும் அம்புக்குறியைக் கிளிக் செய்வதன் மூலம், சுயவிவரப் படம், அறிவிப்பு அமைப்புகள் போன்ற தனிப்பட்ட போர்ட்ஃபோலியோ (களை) இங்கு சேமிக்கலாம்.

(தொடரும்....)

இணைய வழி வகுப்புக்கள்
(Online Classes)
தரம் 10, 11 (O/L) மாணவர்களுக்கான
வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
ஆங்கில, தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்.
Zoom செயலி ஊடாக
இணைந்து கொள்ள அழையுங்கள்!
077 304 1905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவைப் போன்று இலங்கை மாறும் அபாயம்

## விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவிப்பு

இலங்கையில்கொரோனாத்தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை மிகவும் வேகமாக அதிகரிக்கும் பட்சத்தில் இந்தியாவின் நிலையே இலங்கைக்கும் ஏற்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார். கொழும்பில்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த சில தினங்களாக ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனம் காணப்பட்டு வருகின்றனர்.இதன்மூலம் கொவிட் பரவல் தீவிரமடைந்துள்ளமையைக்காணக்கூடியதாகவுள்ளது. எனவே அந்த அபாயத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு மக்கள் சார்பில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்.

தொற்றுக்கான ஏதேனுமொரு அறிகுறி காணப்படுபவர்கள் அவர்கள் வீடுகளிலேயே தங்கியிருக்காமல் வைத்தியசாலைக்கு வருகை தந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏதேனுமொரு வகையில் தொற்றாளர் எண்ணிக்கை பாரியளவில் அதிகரிக்குமானால் இந்தியாவில் ஏற்பட்டுள்ளதைப் போன்றதொரு நிலைமை ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது. எனவே இந்த அபாயத்தை தவிர்த்துக் கொள்வதற்காக மக்கள் அவர்கள் சார்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டியது மிக முக்கியத்துவமுடையதாகும்.

வெள்ளியன்று 11 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன. இதன்மூலம் இலங்கைக்குள்ளும் கொவிட் பரவலானது மிகத் தீவிரமாக அதிகரித்து வருகின்றமை தெளிவாகிறது. தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்களில் பெருமளவா




னோர் கடந்த நாள்களில் நுவரெலியா மற்றும் கதிர்காமம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்றவர்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் நிலை ஏற்படுமாயின் ஒரு தடுப்பூசியையேனும் வழங்கி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் ஆலோசனை வழங்கியுள்ளது. - என்றார்.

# தம்மிக்கவின் பாணி மருந்து பயனேயற்றதாம்

## மருத்துவ ஆய்வில் உறுதியானது!

கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பெரேரா தயாரித்த கொரோனா பாணி தடுப்பு மருந்து கொரோனாவில் இருந்து எவ்வகையிலும் பாதுகாப்பளிக்கவில்லை என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் உத்தரவுப்படி ராஜரட்டை பல்கலைக்கழகத்தால் அனுராதபுர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 68 கொவிட் தொற்று நோயாளிகளுக்கு தம்மிக்க தயாரித்த கொரோனா பாணி வழங்கி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இதனை எடுத்துக்கொண்டவரிடத்திலும் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை என ராஜரட்ட பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சோந்த டாக்டர் சேனக பிலபிட்டிய ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போது கூறினார்.

தம்மிக்கவின் இந்த கொரோனா பாணியை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் ஊடகங்கள் முன்னிலையில் அருந்திய நிலையில் இந்த பாணி குறித்த நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டது.

எனினும் இதனை அருந்திய பின்னரும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி கொரோனாத் தொற்றுக்குள்ளகி பாதிக்கப்பட்டு மீண்டார்.

இந்நிலையில் ஆராய்ச்சிகளின் பின்னர் இந்தப் பாணி கொரோனாத் தொற்று நோயில் இருந்து பாதுகாப்பளிப்பதில் பயனற்றது என சுகாதார அமைச்சு நிபுணர் குழு அறிவித்தது.

இதேவேளை, இலங்கைக்கு தடுப்பூசி கிடைத்த பின்னர் தான் கைவிடப்பட்டதாக கடந்த மாதம் தம்மிக்க பெரேரா கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கிடையில் அவரது பாணி மருந்து பயனற்றது என ஆய்வுகளின் பின்னர் அறிவிக்கப்பட்டமை குறித்து தம்மிக்க பெரேரா இதுவரை எந்தக் கருத்துக்களையும் இதுவரை வெளியிடவில்லை.



# விதிமுறை மீறிய இரு தேவாலயங்கள் மன்னாரில் தனிமைப்படுத்தப்பட்டன

மன்னார், மே 02

மன்னாரில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறின என இரண்டு தேவாலயங்கள் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கற்கடந்த குளம் மற்றும் அச்சங்குளம் பகுதிகளில் உள்ள இரண்டு தேவால யங்களிலும் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) திருவிழா திருப்பலி இடம்பெற்றது.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி பக்தர்களை ஒன்றுகூட்டிய குற்றச்சாட்டில் குறித்த இரண்டு தேவாலயங்களும் தனிமைப்படுத்தப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று முதல் எதிர்வரும் 14 நாள்களுக்கு குறித்த தேவாலயங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றமையை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

# தடுப்பூசி செலுத்திய பின்னரும் கொரோனாப் பாதிப்பு வரலாம்

கொழும்பு, மே 03

தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்ட பின்னரும் ஒருவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு உள்ளதாக தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியக் கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியின் முதல்குப்பிசெலுத்தலின் பிறகு 12 வார காலத்துக்கு ஒரு பெறுநருக்கு பாதுகாப்பு உள்ளது.

இந்தநிலையில் முதல் டோஸ் செலுத்தலுக்கு பிறகு ஒருவர் வைரஸால் பாதிக்கப்படலாம் என்றாலும், கடுமையான அறிகுறிகளில் இருந்தும் வைரஸால் பாதிக்கப்படுவதிலிருந்தும் அவரைப் பாதுகாக்கும் திறன் உள்ளது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கிடையில், தற்போது அதிக எண்ணிக்கையில் தொற்றுக்கள் அதிகரித்திருப்பதற்கான காரணம், முக்கியமாக புத்தாண்டுக் கொண்டாட்டம் மற்றும் குறிப்பாக நுவரெலியா மற்றும் கதிர்காமத்துக்கு சென்றமையாகும் என்று அவர் கூறியுள்ளார்.

# கொரோனாத் தொற்று அதிகரிப்பு இலங்கைக்கு ஜப்பான் உதவி

இலங்கையில் அண்மைய சில நாள்களாக கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வருகிறது. இவ்வாறு பரவும் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில் இரண்டாம் கட்டத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக கொவிட் தடுப்பூசித் திட்டத்தை வலுப்படுத்த ஜப்பான் அரசு மே 1 சுகாதார அமைச்சகத்திற்கு 50 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான குளிர் பெட்டிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது..

இலங்கையில் உள்ள ஜப்பான் தூதுவர் சுகியாமா அகிரா, ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறுவர்நிதியத்தின் (யுனிசெப்) ஒருங்கிணைப்புடன் கொழும்பில் உள்ள யுனிசெப் தலைமையகத்தில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் இந்த குளிர் பெட்டிகளைக் கையளித்தார்.

இரண்டாம் கட்டத்தின் கீழ் 750 குளிர்சங்கிலி உதவிசாதனங்கள் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தத் தடுப்பூசி குளிர் பெட்டிகள் தடுப்பூசி நோக்கங்களுக்காக மருத்துவ அதிகாரி அலுவலகத்திலிருந்து களத்திற்கு குறிப்பிட்ட வெப்ப நிலையில் தடுப்பூசியைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல முடியும்.

# இரவு நேரக் களியாட்டங்களுக்கு இலங்கையில் தடை உத்தரவு

நாட்டிலுள்ள ஹோட்டல்களில் இரவு நேரங்களில் ஒன்றுகூடல்கள் கட்டுப்படுத்தப்படவுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஹோட்டல்களில் இரவு நேரக் கேளிக்கை நிகழ்வுகள், விடுதிகள், ஒன்றுகூடல்கள், நைட் கிளப் ஆகியவற்றின் செயற்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் இரு வாரங்களுக்குக் ஹோட்டல்களில் இரவு 10 மணிக்கு பின்னர் இரவு நேரக் கேளிக்கை நிகழ்வுகள், விடுதிகளில், ஒன்றுகூடல்கள், நைட் கிளப் ஆகியவற்றின் செயற்பாடுகளுக்கான தடை விதிக்கப்பட்டுள்ளது.

# இந்து அறநெறிப் பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டன

கொழும்பு, மே 03

நாட்டிலுள்ள சகல இந்து அறநெறிப் பாடசாலைகளையும் மறு அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் இந்து கலாசாரத் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளதாக புத்தசாசன மற்றும் சமய கலாசார விவகார அமைச்சரும், இந்து மத விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளருமான இராமச்சந்திர குருக்கள் பாபுர்மா தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றைகருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீடுகளில் சிகிச்சை அளிக்கப்படும் கொரோனாத் தொற்றாளர்கள்

தென்னிலங்கையில் பெருமளவு கொவிட் தொற்றாளர்கள் வீடுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

காலி மாவட்டத்தில் ஹபராதுவ பகுதியில் 36 தொற்றாளர்களும், அம்பலங்கொடைப் பகுதியில் 35 தொற்றாளர்களும், இமதுவ பகுதியில் 13 தொற்றாளர்களும், ரத்கம பகுதியில் 09 தொற்றாளர்களும், காலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 தொற்றாளர்களும், போபே பொத்தல பகுதியில் 08 தொற்றாளர்களும், கரந்தெனிய பகுதியில் 04 தொற்றாளர்களும், பலபிட்டிய பகுதியில் 03 தொற்றாளர்களும், ஹிக்கடுவ பகுதியில் 4 தொற்றாளர்களும், வெலிவிடிய பகுதியில் 2 தொற்றாளர்களும், உடுகம பகுதியில் 2 தொற்றாளர்களும், அக்மிமன மற்றும் எல்பிட்டிய பகுதியில் இரண்டு தொற்றாளர்களுமாக 114 தொற்றாளர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் விசேட வைத்தியர் சந்திம சிறிதுங்கவை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தில் 8 கொவிட் சிகிச்சை நிலையங்கள் காணப்படுகின்றன எனவும், அவற்றில் 1,400 கட்டில்கள் காணப்படுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு கொரோனாத் தொற்றாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கட்டில்கள் அனைத்திலும், கொவிட் தொற்றாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிடுகின்றார்.

காலி மாவட்டம் மாத்திரமன்றி, பல்வேறு பகுதிகளிலுள்ள தொற்றாளர்கள், காலிக்கு அழைத்து வரப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால், சில நோயாளர்களை கொவிட் சிகிச்சை நிலையங்களில் சேர்க்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைமாமணி, கீதசொரூபி
செல்வி தர்சினி ஞானேந்திரன்
(நுண்கலைமாணி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
ஆசிரியர், நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை,
இயக்குநர்,கம்சப்பிரியா இசைக்கல்லூரி)

“ இசை கவலை மற்றும் மன அழுத்தத்தைக் கடுமையாகக் குறைத்து இரத்த அழுத்தம் மற்றும் இதயத்துடிப்பை இயல்பாக்கின்றது. கர்ப்பிணிப் பெண்கள் எளிதாகப் பிரசவிக்க இசையைப் பயன்படுத்துகிறார்கள். நம் ஆன்மாவை தாலாட்டும், மலர்த்தும், புத்துணர்வாக்கும் சக்தி இசைக்கு உண்டு. அதை மனதார நாம் உணர்ந்திருக்கிறோம். ஆனால், அது மருத்துவ ரீதியாகவும் உண்மை என்று தெரிவிக்கின்றன ஆய்வுகள். இசை கேட்கும்போது அது மனதிற்கும் மூளைக்கும் பொஸிட்டிவ் மாற்றங்களைத் தருகிறது.

# மனித வாழ்வில் இசை மருத்துவம்

உலகெங்கிலும் பல்வேறு வகையான உடல் மற்றும் மனநலக் கோளாறுகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு இசையை பல்வேறு மருத்துவ நிபுணர்கள் கையாண்டு வருகின்றனர்.

இதனை இசைச் சிகிச்சை (Music Therapy) என்று சொல்கின்றார்கள். இதனால் பலதரப்பட்ட நோய்களை முழுமையாகக் குணப்படுத்த முடியும் என சுகாதார ஆய்வுகள் கூறுகின்றன.

ஒரு குழந்தையைத் தூங்க வைக்கும் தாலாட்டை விட இசைச் சிகிச்சைக்கு சிறந்த ஆதாரம் தேவையா? கருவிலிருக்கும் குழந்தை கருவில் இருக்கும் போதே தாயின் இதயத்துடிப்பையும், அவர் கேட்கும் இசையையும் கூர்ந்து கவனிக்கின்றது. கருவில் இருக்கும் போது கேட்கப்படும் இசை மற்றும் பாடல்கள் மீது அக் குழந்தைக்கு இயற்கையாக ஈர்ப்பு ஏற்படுகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. கர்நாடக சங்கீதமோ, நாட்டுப்புறப்பாடல்களோ, தாலாட்டுப்பாடல்களோ எது என்றாலும் மனஅழுத்தத்தை எதிர்த்துப் போராடவும், வலியை நிர்வகிக்கவும், உணர்ச்சி ரீதியான விடுதலையை அனுபவிக்கவும், ஆன்மீக இணைப்பை மேம்படுத்தவும் இசை ஒரு மிகச் சிறந்த கருவியாக விளங்குகின்றது.

இந்திய நாட்டு இசைச் சிகிச்சை என்பது பண்டைய குணப்படுத்தும் நடைமுறைகள், தற்போதைய மருத்துவ நடைமுறைகள் மற்றும் இசைமரபுகளின் ஒருங்கிணைப்பு ஆகும். 'மியூசிக்தெரபி' என்பது இந்தியாவில் மிகவும் பிரபலமாகிக் கொண்டு இருக்கிறது.

உலகெங்கிலும் மருத்துவர்கள், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள்,மனநல மருத்துவர்கள், உளவியலாளர்கள், நோயை விரைவில் குணப்படுத்துவதற்காக இசைச் சிகிச்சையாளர்களின் உதவியை நாடுகின்றனர். இசைச் சிகிச்சை இப்போது ஒரு நிறுவப்பட்ட சுகாதாரத் தொழிலாக மாறி வருகிறது. இந்த நடைமுறையில் மருத்துவர் முதலில் நோயாளியின் தேவைகளை மதிப்பிடுகிறார். ஒரு தகுதி வாய்ந்த இசை சிகிச்சையாளர் நோயின் தீவிரத்தைப் பொறுத்து ராகம் மற்றும் தாளத்தைத் தேர்வு செய்கிறார். மேலும் நோயைக் குணப்படுத்த உகந்தது பாட்டுக்களா அல்லது கருவி இசையா என்பதையும் முடிவு செய்கின்றார். நோய்த் தடுப்பு சிகிச்சைக்கு மியூசிக் தெரபி



மிகவும் பொருத்தமானது என்பதால் பாரம்பரிய சிகிச்சையுடன் இசைச்சிகிச்சையும் இணைத்து சிகிச்சை அளிக்கிறார்கள்.

மேலும் "me lodic Intonation Therapy" என்பது பேச்சு கோளாறுகளைச் சரிசெய்யும் ஒரு இசை சிகிச்சை ஆகும். Storke Therapy எனப்படும் பக்கவாத சிகிச்சையுடன் மியூசிக் தெரபி சேர்க்கப்பட்டால் அது சிறந்த மற்றும் வேகமான பலனைத்தரும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். புற்றுநோய் வார்டுகள் மற்றும் மருத்துவ இல்லங்களில் நோயாளிகளின் வலியைக் குறைப்பதற்காக இசை பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இசையைக் கேட்பதன் மூலம் மாத விடாய் வலி அல்லது பிற தினசரி வலிகளைக் கூட எளிதில் எதிர்கொள்ளலாம். இசைச்சிகிச்சை போதைக்கு எதிராக போராட உதவுகிறது. குழு இசை தயாரிப்பில் பங்கேற்பது போதைப்பொருளுடன் போராடும் மக்களுக்கு தளர்வு, சமூக இணைப்பு மற்றும் உணர்ச்சிபூர்வமான வெளியீடு ஆகியவற்றைக் கண்டறிய உதவுகிறது. அதுமட்டுமன்றி இசை கவலை மற்றும் மன அழுத்தத்தைக் கடுமையாகக் குறைத்து இரத்த அழுத்தம் மற்றும் இதயத்துடிப்பை இயல்பாக்கின்றது. கர்ப்பிணிபெண்கள் எளிதாகப் பிரசவிக்க இசையைப் பயன்படுத்துகிறார்கள். நம் ஆன்மாவை தாலாட்டும், மலர்த்தும், புத்துணர்வாக்கும் சக்தி இசைக்கு உண்டு. அதை மனதார நாம் உணர்ந்திருக்கிறோம். ஆனால், அது மருத்துவ ரீதியாகவும் உண்மை என்று தெரிவிக்கின்றன ஆய்வுகள். இசை கேட்கும்போது அது மனதிற்கும் மூளைக்கும் பொஸிட்டிவ் மாற்றங்களைத் தருகிறது.

'பிரைன் ப்ளாஸ்டிசிட்டி' என்பது வயது, நேரம் என்ற வரம்புகள் அற்று மூளையின் செயல்களைத் தூண்டச் செய்யும் ஒரு பயிற்சி. அந்தப் பயிற்சி, இசை கேட்கும்போது தானாகக் கிடைக்கிறது. பொதுவாக இசையுடன் நேரம் செலவழிக்கும் மனித மூளை, இசையிடம் இருந்து விலகி இருக்கும் மனித மூளையைவிட மாறுபட்டு இருப்பதாகவும், இசைப் பிரியர்களுக்கு "கார்ப்பஸ் கொலோஸம்" எனப்படும் நரம்பு இணைப்புகள் இயல்பைவிட வலுவாக இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இசை, அது குறித்த தொழில்முறை ஞானம் இல்லாதவர்களுக்கும், நிரம்ப நிரம்ப இதம் தரக்கூடியது. அது மூளையையும் சுறுசுறுப்பாக்கும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். வேலை செய்யும் போது பாடல்கள் கேட்பது, வேலை சுமையைக் குறைத்து புத்துணர்ச்சி பெறவைப் பதாகவும் தெரிவிக்கும் அவர்கள், நாள்பட்ட மன அழுத்தத்தைக் குறைப்பது, ஆற்றலை அதிகரிப்பது என்று இசையின் பயன்களை அடுக்கிக் கொண்டே போகிறார்கள்.

**இசையும் ஹோர்மோன்களும்**

'ஆக்ஸிடைஸின்' எனப்படும் பிரைன் ஹோர் மோன், நம்பகத்தன்மை, தாராள உணர்வு, மகிழ்ச்சி ஆகியவற்றை தரக்கூடியது. அதிகமாக சாக்லெட் சாப்பிடும்போது, வெற்றி பெறும்போது என குஷியான தருணங்களில் எல்லாம் மனதில் ஏற்படும் அந்த ஜில் மாற்றம், அந்த ஹோர்மோன் தூண்டப்படுவதால் தான். மியூசிக் கேட்கும்போது ஆக்ஸிடைஸின் ஹோர்மோன் அதிகமாகத் தூண்டப்படுகிறது என்பது அடுத்த ஆச்சரியத் தகவல்.

**கற்பதால் கிடைக்கும் நன்மைகள்!**

இசையைக் கேட்கும்போதே இவ்வளவு பலன்கள் எனில், கற்கும்போது..? இதோ…

1. பேச்சாற்றல் வளரும். செவித்திறன், விழித்திறனை அதிகரிக்கும்.
2. ஐக்யூ மட்டம் உயரும்.



3. மனதுக்கும் மூளைக்குமான தொடர்பு அதிகரிக்கும்.
4. வெளியுலகைப் பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.
5. கற்றல் குறைபாடு உள்ளவர்களுக்கு இசை சிறந்த பயிற்சியாக அமையும்.
6. இசை மற்றும் அதற்குரிய கருவிகள் பயிற்சி, மூளையின் உள் அமைப்பு மற்றும் பாகங்களுக்கு இடையில் இருக்கும் தொடர்புகளை வலுப்படுத்தும்.
7. இசை குறித்த சிந்தனை மனதில் இருக்கும் போது, மனதுக்கும் மூளைக்குமான தொடர்புகள் சிறப்பாகச் செயல்படும்.

**குழந்தைகளுக்குக் கிடைக்கும் நன்மைகள்:-**

இசை குழந்தைகளின் திறன் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றும். அவர்களுக்கு ரைம்ஸ் கற்றுக் கொடுக்கப்படுவதன் அடிப்படையே அதுதான்!

மேலும் –

1. மூளையின் செயல்திறன் அதிகரிக்கும்.
2. மூளையின் குருதி ஓட்டம் சீராகும்.
3. நான்கு வருடங்கள் இசை பயின்றால், அதன் பலன் 40 வருடங்கள் கழித்தும் மூளையில் பிரதிபலிக்கும்.
4. ஏழு வயதிற்கு முன்னரே கற்க ஆரம்பித்தால் அதன் பலன் ஆயுளுக்கும் இருக்கும்.
5. இசை கற்கும் குழந்தைகள் முகத்தில் சிரிப் போடும் மனதில் மகிழ்வோடும் இருப்பார்கள்.
6. குழந்தை முதல் முதியவர்கள் வரை, கேட்கும் போதும், கற்கும்போதும் அவர்களின் கவனிக்கும் திறன் அதிகரிக்கும்.

இசை மூலமான சிகிச்சை நோயாளிகளுக்கு அவர்களின் நோய்க்கான சிகிச்சையுடன், 'மியூஸிக் தெரபி' கொடுக்கப்படும்போது, அது அவர்களின் மனச்சோர்வு, மன அழுத்தத்தைக் குறைக்கிறது.

குறிப்பாக, 'அல்ஸைமர்' எனப்படும் ஞாபக மறதி நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு மியூஸிக் தெரபி நல்ல பலன் கொடுப்பதாக அமைகிறது. நோயாளிகள் கேட்கும்போதும், பாடும்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் என மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதற்கும், ஆரோக்கியமாக இருப்பதற்கும் சிறந்த வழி இசையை கேட்பதே. எனவே தினசரி மன அழுத்தத்தைக் குறைத்து ஏனைய நோய்களில் இருந்து விடுபட்டு நல்வாழ்வை அதிகரிக்க இசையைக் கேட்டு நன்மையைப் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் வரலாற்று சிறப்புமிக்க இடத்துக்கு களவிஜயம் செய்த கூட்டமைப்பு பிரதிநிதிகள்

மட்டக்களப்பு, மே 03

மட்டக்களப்பு - ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஈரளக்குளம், புளுட்டுமானோடைப் பகுதியில் உள்ள பண்டைய வரலாற்றுடன் தொடர்புபட்ட பிரதேசத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் கடந்த சனிக்கிழமை களவிஜயமொன்றை மேற்கொண்டனர்.

அண்மையில் அரச அதகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பௌத்த பிக்குகள் வருகை தந்து பார்வையிட்டு அந்த இடத்தில் பௌத்த மத்தியஸ்தானம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் அந்த இடத்துக்கு களவிஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கோ.கருணாகரம், இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா. சிறிநேசன், முன்னாள் மாகாண சபைப் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, மாகாணசபை உறுப்பினர் மா.நடராசா, உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன் உள்ளிட்ட பலரும் இந்த விஜயத்தில் கலந்து கொண்டனர்.

குறித்த பிரதேசத்தின் நிலைமைகள் மற்றும் சூழலமைவுகள் தொடர்பில் இவர்கள் பார்த்து பரிசீலித்தனர். இப்பிரதேசம் பண்டைய வரலாற்றுடன் தொடர்புபட்ட பிரதேசமாக இருப்பதுடன் பல செதுக்கல்கள், படி அமைப்புகள் போன்றனவும் இங்கு அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி பிரதேசம் தொல்பொருள் சார்ந்த பிரதேசமாக இருந்தாலும், இதனை வைத்து இது பௌத்தத்துக்குரியது என்று சொல்லி பௌத்த விடயங்களை முன்னெடுப்பதை நோக்காகக் கொண்டு அரசு செயற்பட முனையக் கூடாது, அதிகாரிகளும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கக் கூடாது, அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படின் அதற்கெதிரான நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் என்ற அடிப்படையில் ஊடகங்கள் வாயிலாகப் பலரும் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மொடர்னாவின் கொவிட் தடுப்பூசிக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி

உலக சுகாதார நிறுவனம் அவசரகால பயன்பாட்டுக்காக மொடர்னாவின் கொவிட் தடுப்பூசிக்கு அனுமதியளித்துள்ளது. இதனை அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் உலக சுகாதார நிறுவனத்தால் அவசரப் பயன்பாட்டுக்காக அனுமதியளிக்கப்பட்ட ஐந்தாவது தடுப்பூசி மொடர்னாத் தடுப்பூசியாக அமைந்துள்ளது.

தடுப்பூசி பகிர்வுத் திட்டத்துக்கான முக்கிய இடமான இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து தடுப்பூசிகளின் விநியோகம் தடைப்பட்டுள்ள நிலையில், தடுப்பூசிகளின் விநியோகத்தைச் சீர்செய்யும் வகையில் மொடர்னாவுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என உலக சுகாதார அமைப்பின் உதவி இயக்குநர் மரியாங்கெலா சிமாவோ தெரிவித்தார்.

தொற்றுநோய்களின் நெருக்கடி காரணமாக இந்தியத் தடுப்பூசிகளின் ஏற்றுமதியைத் தடை செய்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் அனுமதியை அடுத்து மொடர்னா அதன் உற்பத்தி வலையமைப்பின் விரிவாக்கத் திட்டத்தை 300 கோடி குப்பிகள் வரை அதிகரிக்கும் என்று அறிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த ஜனவரி மாதத்தில் உலக சுகாதார அமைப்பின் நோய்த்தடுப்பு தொடர்பான நிபுணர்களின் ஆலோசனைக் குழு 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து வயதினருக்கும் மொடர்னாவின் தடுப்பூசியைப் பரிந்துரைத்தது.

இதேவேளை ஜெனீவாவைத் தளமாகக் கொண்ட சுகாதார அமைப்பு, சீனாவின் சினோஃபோர்ம் மற்றும் சினோவாக் ஆகியவற்றிலிருந்து கொவிட் தடுப்பூசிகளின் விரிவான பரிசீலிப்பைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. இந்தப் பரிசீலனை அடுத்த வாரத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ். - கொழும்பு தபால் ரயிலில் படுக்கை ஆசன சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புக்கு இடையிலான இரவு நேரத்தபால் ரயில் சேவையில் எதிர்வரும் ஏழாம் திகதி முதல் படுக்கை ஆசன சேவை ஆரம்பமாகும் என யாழ்ப்பாண ரயில் நிலைய பிரதான ரயில் அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

குறித்த தபால் ரயிலில் படுக்கை ஆசன வசதி கொண்ட மேலதிக பெட்டி இணைக்கப்பட்டு சேவை இடம்பெறவுள்ளதாகவும் சேவையைப் பெற விரும்புவோர் ஆசன முற்பதிவுகளை யாழ். ரயில் நிலையத்தில் மேற்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ரயில் சேவை, கொழும்பிலிருந்து காலை 5.45 மணிக்குப் புறப்படும் ரயில் மதியம் 12 மணிக்கு யாழ்ப்பாணத்தை அடைந்து மீண்டும் 1.15மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்டு 1.37 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு புறப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நகர் சேர் கடுகதி ரயில் சேவை மாத்திரம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஏனைய சேவைகள் வழமைபோல் தற்போதுள்ள கொரோனா நிலைமைக்கு ஏற்றவாறு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்று வருகின்றன எனவும் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

# துறைமுக நகர சட்டமூலம் அரசின் திட்டம் இதுவே!

## போட்டுடைத்தார் அநுர

பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார ஆணைக்குழு சம்பந்தமான சட்டமூலத்தை அடுத்த வாரம் ஒரே தினத்தில் விவாதத்துக்கு எடுத்து நிறைவேற்ற அரசாங்கம் தயாராகி வருகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் குறிப்பிடுகையில் -

துறைமுக நகர ஆணைக்குழு சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள சட்டமூலம் தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

அந்த வழக்கின் தீர்ப்பு என்ன என்பது தொடர்பாக நீதிமன்றம் இன்னும் சபாநாயகருக்கு அறிவிக்கவில்லை. இவ்வாறான நிலைமையில், எதிர்வரும் புதன்கிழமை சட்டமூலம் தொடர்பான விவாதத்தை நடத்த அரசாங்கம் யோசனை முன்வைத்துள்ளது.

நீதிமன்றம் இன்னும் தீர்ப்பை வழங்காததாலும் பாரதூரமான சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாலும் சட்டமூலம் தொடர்பான விவாதத்தை இரண்டு நாள்களாவது நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருந்தது.

எனினும் 4 ஆம் திகதி தீர்ப்பு கிடைத்து விடும் எனவும் 5 ஆம் திகதி கட்டாயம் விவாதத்தை நடத்தி சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும் எனவும் ஆளும் கட்சி தொடர்ந்தும் கூறியது.

எமது எதிர்ப்புக்கு மத்தியிலும் எதிர்வரும் 5 ஆம் திகதி துறைமுக நகரம் தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது எனவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி கோட்டாபய கூறினார் என்று சீன ஊடகங்களில் இடம்பிடித்த செய்தி

சீனாவுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தத் தான் முன்னுரிமை வழங்கி இருப்பதாகவும் சீனாவின் அபிலாஷை சம்பந்தமான விடயங்களுக்குக் கூடிய ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார் எனச் சீன ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் வோய் போஃங்கின் இலங்கை விஜயம் தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியில் சீன ஊடகங்கள் இதனைக் கூறியுள்ளன.

சீனப் பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயத்தின் போது, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராணுவம் உட்படப் பலதுறைகளில் ஒத்துழைப்புகளை வழங்குவதற்கான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன எனவும் அந்த ஊடகங்கள் கூறியுள்ளன.

இலங்கை சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றமையுடன், பிராந்தியத்துக்கு அப்பால் உலக வல்லரசுகளின் அதிகாரங்களுக்கு அடிபணியாது எனவும் எந்த நாட்டுடனும் இலங்கை கூட்டணி அமைக்காது என இலங்கை ஜனாதிபதி, சீனப் பாதுகாப்பு அமைச்சரிடம் கூறினார் எனவும் சீன ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்துக்கு அப்பால் உலக வல்லரசுகளைத் தனது பதவிக் காலத்தில் முக்கியத்துவமாகக் கருதுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை இந்தக் கருத்து தெளிவாகக் கூறுகிறது.

இதேவேளை, சர்வதேச நாடுகள், ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு தான் அடிபணியப் போவதில்லை என அறிவித்திருப்பது இந்தியாவின் நிலையைக் கேள்விக்குட்படுத்துவதுடன் இதில் இந்தியாவுக்கு மறைமுக செய்தி இருக்கின்றது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## மஞ்சள் சித்திரவடிவ வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தும் முறை

மஞ்சள் சித்திரவடிவ வைரஸ் நோயானது பூசணி, பயறு, உழுந்து போன்ற பயிர்களில் விளைச்சலைப் பாதிக்கிறது. மஞ்சள் சித்திரவடிவ வைரஸ் நோயினது காவி வைற் பிளை ஆகும். இதனை வரும் முன் கட்டுப்படுத்துவதே சிறந்த முறை. காரணம் வந்த பிறகு கட்டுப்படுத்துவது கடினமாகும். வைரஸ் நோய்க்கான தீர்வு தாவரத்தினது எதிர்ப்பியல்பு ஆகும்.

கர்நாடகாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு **'Journal of Entomology and Zoology Studies** 2018' என்ற ஆய்வுக்கட்டுரைப்பகுதியில் வெளிவந்தது. அதன் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

இரசாயன பூச்சிக் கொல்லியாகிய **imidachloprid** உட்பட 5 இரசாயனங்களைப் பயன்படுத்தி இந்த ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வு மூலம் சித்திர வடிவ வைரஸ் நோய்கட்டுப்படுத்தப்பட்டது.

இமிடாகுளொபிட் மூன்று தடவையாக வேறுபட்ட சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டது.

1. விதை பரிகரணம் **5.0 ml/ kg**
2. விதைத்து 30 ஆம் நாள் **5.0 ml/ kg**
3. விதைத்து 45 ஆம் நாள் **0.5 ml/l**

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லயன் சி.ஹரிகரன்**
செயலாளர்,
நோயாளர் நலன்புரிச் சங்கம்,
ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை.



# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோயாளரை திருப்பியனுப்பும் அவலம்!

## அதிகாரிகள் அசமந்தப் போக்கு அரசியல்வாதிகள் பாராமுகம்...!

நாட்டின் வடக்கே, வடமுனையில் அமையப்பெற்ற - புற்றுநோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும் - மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள ஒரு மிகப் பெரிய அரசவைத்தியசாலை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரு விடுதிகளுடன் மட்டும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு இயங்கிவந்தது.

2011 ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் 'கலர்ஸ் ஒவ் கரேஜ்' அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் 30 கோடி ரூபா செலவில் கல்விக்காருண்யன் லயன் ஈ.எஸ்.பி.நாகரட்ணம், மாணிக்க சோதி அபிமன்னசிங்கம் ஆகியோரால் நன்கொடையாக காணி வழங்கப்பட்டு புற்றுநோய் வைத்தியசாலையை உருவாக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் புற்றுநோய் வைத்தியசாலையைப் புதிதாக நிர்மாணிக்கும் பொருட்டு டிரைல் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரும் 'மாஸ் இன்டிமேட்' நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நாதன் சிவகணநாதன் மற்றும் அவரது நண்பர் சரித்த உனப்புவ ஆகியோர் தலைமையில் தெற்கே தெய்வேந்திர முனை முதல் வடக்கே பருத்தித்துறை வரையில் பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டதன் பயனாக 30 கோடி ரூபா நிதியை சேகரித்திருந்தனர். 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 670 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்தப் பாதயாத்திரையின் போது 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்ட அதேவேளை 12 பேர் மட்டுமே முழுமையாகப் பங்கெடுத்திருந்தனர்.

2 லட்சத்து 50 ஆயிரம் பேர் வழி நெடுகிலும் இன, மத பேதங்களுக்கப்பால் ஒன்றிணைந்து உதவிகளைப் புரிந்துள்ள நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களும், புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்களும் தமது பங்களிப்பை வாரி வழங்கினர்.

இவ்வாறு திரட்டப்பட்ட நிதி உரிய தரப்பினரிடம்

## உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன இதற்குத் தீர்வு வழங்குபவர் யார்?



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கு என்று வழங்கப்பட்டிருந்தும் கட்டுமானப் பணிகளோ அதற்கான ஏற்பாடுகளோ எவையும் இடம்பெறாமல் அவ்வாறான ஒரு நிதி உள்ளது என்ற அக்கறையே இல்லாத நிலை இருந்தது.

2011 நவம்பர் மாதம் உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்டதும், வைத்தியசாலை அமைந்துள்ள பகுதி ஆளுகைக்குட்பட்ட வலி.வடக்கு பிரதேசசபையில் என்னால் இந்த நிதிக்கு என்ன நிலைமை, எதற்காக இன்னும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானங்கள் இடம்பெறவில்லை என்று தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவுக்கும், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. ஜனாதிபதி மஹிந்தவின் விரைவான உத்தரவால் உடனடியாகக் கட்டுமானப் பணிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு நிறைவுற்று புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு திறந்துவைக்கப்பட்டமை வடக்கு, கிழக்கு மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

பல்வேறு நவீன வசதிகளைக் கொண்டமையப் பெற்றுள்ள இந்த வைத்தியசாலையில் பிரத்தியேகமான பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் விடுதி, சிறுவர் பூங்கா என்பன அமைக்கப்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக 120 கட்டில்களும் போடப்பட்டுள்ளன. இந்த வைத்தியசாலையின் ஊடாக யாழ்.மாவட்டம் மட்டுமல்லாது வடக்குமாகாண மக்களும் வெளி மாகாணங்களைச் சேர்ந்த மக்களும் பயன்பெற முடியும் நிலைமை உருவானது. இன்று மஹரகமவுக்கு இணையான சகல வசதிகளும் அதாவது லீனியர் அக்சிலலேற்றர் முதற்கொண்ட நவீன சிகிச்சை வசதிகளுடன், நோயாளர்களுக்கு முழுமையான ஒரு சிகிச்சையை வழங்கும் அளவுக்கு பரவி விரிந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், கதிரியக்க தொழிநுட்பவியலாளர்கள் என்று சகல பணியாள்தொகுதியும் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து வழங்கப்பட்டிருந்தாலும், தற்போது வைத்திய நிபுணர்கள், கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் என 10 பேர் மட்டுமே போதனா வைத்தியசாலையின் பணியாள்களாகக் காணப்படுகின்றனர். ஏனைய சகல பணியாள்களும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையினாலேயே வழங்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலை திறப்பு நிகழ்வில் அப்போதைய சுகாதார அமைச்சரும் பின்னர் 2014 - 2019 ஆம் ஆண்டுக்காலப் பகுதி ஜனாதிபதியுமாகிய மைத்திரிபால சிறிசேன உரையாற்றியபோது, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு எந்தக் காலத்திலும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் ஆளுகையிலிருந்து பிரிக்கப்படமாட்டாது, மத்தி, மாகாணத்துக்கு வழங்கிய அதிகாரத்தை மீளப் பெறமாட்டாது என்ற உத்தரவாதத்தை வழங்கினார்.

ஆனால், இன்று சில வியாபார நோக்கம் கொண்டவர்கள் தமது சுயலாபத்துக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து புற்றுநோய் வைத்தியசாலையை மத்திக்கு எடுப்பதற்குத் தலையால் குட்டிக்கரணம் அடிக்கின்றார்கள்.

இது இவ்வாறிருக்க, புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய சகல வசதிகளும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்றும், யாழ்.



போதனா வைத்தியசாலையின் பணியாள் தொகுதியாகிய கதிரியக்க தொழிநுட்பவியலாளர்களின் மனிதநேயமற்ற - கடமை உணர்வற்ற - விட்டேத்திப் போக்கால் கதிரியக்கப்பிரிவுக்கு வரும் புதிய நோயாளர்களை மஹரகமவுக்குச் செல்லுமாறு அனுப்புகின்றார்கள்.

தற்போதைய கொரோனா அச்சுறுத்தல் காலத்தில் வசதி படைத்த செல்வந்தர்களே மஹரகமவுக்குச் செல்லமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படும் இந்த நேரத்தில், அப்பாவி மக்கள் -வசதி குன்றியவர்கள் - தெல்லிப்பழையில் சகல வசதிகளும் இருந்தும் மஹரகமவுக்கு செல்கின்றமை எவ்வாறு நியாயமாகும்? புற்றுநோயாளர் ஒருவருக்கு ஜீனியாசிலேற்றர் ஒழுக்குமுறை தவறாமல் சிகிச்சை வழங்கினால் பல நோயாளர்களைக் குணப்படுத்த முடியும். ஆனால், இந்த உத்தியோகத்தர்கள் அவர்களுக்குக் கிரமமாக வழங்காது கிரமமின்றி வழங்குவதால் அவர்களின் நோய்த்தாக்கத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றார்கள். இதனால் பல உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. இதற்கான அடிப்படைக் காரணம் தமக்கு 2 லட்சம் ரூபாவுக்கு மேல் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்பதற்காக! மஹரகமவில் 150 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதும் தெல்லிப்பழையில் 50 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதும் ஒன்றாகுமா? அரச நிதி முகாமைத்துவம் இதற்கு இடமளிக்குமா? ஆனால், நோயாளர்கள் துன்பப்பட்டு, அல்லற்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் முறையிட்டு, இவர்களை நிர்வகிக்கின்ற போதனா வைத்தியசாலையில் முறையிட்டும் அப்பாவி நோயாளர்களுக்கு எந்தத் தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை!

வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்று எல்லோரும் பதவிக்கதிரைகளை அலங்கரித்துக்கொண்டு - சூடேற்றிக்கொண்டு - இருக்கிறார்களே தவிர, நோயாளர் தொடர்பில் எந்தக் கரிசனையும் எடுப்பவர்களாகத் தெரியவில்லை.

இவர்களைக் குறைகூறி என்ன பயன்? யாழ். மாவட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், க.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் என்று மக்களின் வாக்குகளை அவர்களுக்கு சேவைசெய்வோம் என்று பசப்பு வார்த்தைகள் பலகூறிப் பெற்றவர்கள்கூட அந்த மக்களின் துன்பத்துக்கு - அதுவும் கொடிய புற்றுநோயாளர்களின் துயரத்துக்கு - பாராமுகமாகச் செயற்படுகின்றமை வேதனைக்குரியது.

இந்த தொழில்நுட்பவியலாளர்கள் தென்னிலங்கையையும் கிழக்கு மாகாணத்தையும் சேர்ந்தவர்கள். இவர்களை அவர்களின் மாவட்டத்துக்கோ அல்லது மகரகமவுக்கோ மாற்றிவிட்டு இங்கு வடபகுதியைச் சேர்ந்த கடமை உணர்வும் மண்பற்றும் கொண்டவர்களைப் பணிக்கமர்த்த அமைச்சரோ ஆளுநரோ ஒருங்கிணைப்புக்குழு தலைவரோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ நடவடிக்கை எடுப்பார்களாயின் ஒட்டுமொத்த வடக்குக் கிழக்கு தமிழினத்துக்கும் இவர்கள் ஆற்றிய பெரும் சேவையாக அது கொள்ளப்படும். செய்வார்களா நம் தமிழ்ப் பிரதிநிதிகள்......?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழகத்தில் மீண்டும் தி.மு.க. ஆட்சி புதிய முதல்வராகின்றார் ஸ்டாலின்!



## பிரபலங்கள் வாழ்த்து; அ.தி.மு.க. தோல்வி

தமிழகத்தில் கடந்த மாதம் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலின் வாக்கு எண்ணும் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பமாகி முடிவடைந்தன. 234 தொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகளின்படி 159 தொகுதிகளைக் கைப்பற்றி தி.மு.க. கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது. இதுவரை அதிகாரத்தில் இருந்த அ.தி.மு.க. கூட்டணி 74 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியது. ஒரு தொகுதியில் மற்றைய ஒருதரப்பு வென்றுள்ளது.

பத்து வருடங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள அபார வெற்றியாக இது பார்க்கப்படுகின்றது.

இதன்படி தமிழகத்தில் கடந்த பத்து வருடங்களின் பின்னர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. கூட்டணியின் ஆட்சி மலர்கின்றது.

இந்நிலையில் தமிழகத்தின் அடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள் எனப் பல பிரபலங்கள் தங்களது சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இதேவேளை, தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிட்ட ஸ்டாலினின் மகனும் பிரபல நடிகருமான உதயநிதி ஸ்டாலின் தனது தந்தையை விட அதிக வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

### தேர்தல் முடிவுகள்வருமாறு:-

| தி.மு.க. கூட்டணி -159 | | அ.தி.மு.க. கூட்டணி -74 | |
|---|---|---|---|
| தி.மு.க - | 128 | அ.தி.மு.க. | - 66 |
| ம.தி.மு.க. - | 04 | பா.ம.க. | - 05 |
| மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - | 02 | பா.ஜ.க. | -04 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - | 02 | த.மா.கா. | - 00 |
| விடுதலை சிறுத்தைகள் கட்சி - | 04 | | |
| மற்றவை - | 04 | மற்றவை - ஒரு தொகுதி | |
| காங்கிரஸ் - | 15 | | |

# 1,500 வாக்குகளினால் கமல் ஹாசன் தோல்வி

தமிழகத்தில் நேற்று நடந்த சட்டசபைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது கடும் இழுபறிக்குப்பின் கோவை தெற்கு தொகுதியில் பா.ஜனதா வேட்பாளர் வானிதி சீனிவாசன் 1,500 வாக்குகள்வித்தியாசத்தில்வெற்றி பெற்றார்.

கோவை மாவட்டம் கோவை தெற்கு தொகுதியில் பா.ஜனதா சார்பில் நிறுத்தப்பட்ட வானதி சீனிவாசனுக்கும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல் ஹாசனுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. முதல் ஒன்றிரண்டு சுற்றுகளில் கமல் பின் தங்கியிருந்தார்.

அதன்பின் தொடர்ந்து முன்னிலை பெற்றார். என்றாலும் வாக்குகள் வித்தியாசம் மிகக் குறைவாகவே இருந்தது. இறுதியில் வானதி சீனிவாசன் 1500 வாக்குகள்வித்தியாசத்தில்வெற்றி பெற்றார். கமல் ஹாசன் கடும் போராட்டத்திற்குப்பின் தோல்வியைத் தழுவினார்.



# ஸ்டாலினுக்கு சுமந்திரன் வாழ்த்துத் தெரிவிப்பு



தமிழக சட்ட சபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தி. மு.கவுக்கும் தலைவர் மு.க. ஸ்டாலினுக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துகள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ 'டுவிட்டர்' தளத்திலும் தனது உத்தியோகபூர்வ 'டுவிட்டர்' தளத்திலும் சுமந்திரன் எம்.பி. மேற்படி வாழ்த்துச் செய்தியைப் பதிவிட்டுள்ளார்.

# காரைநகரில் கொவிட் தொற்று கட்டுப்பாட்டு வாரம் இன்று முதல்

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் கொவிட் - 19 கட்டுப்பாட்டு வாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் யோ. யதுனந்தனன் அறிவித்துள்ளார்.

மேலும், இந்த வாரத்தில், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருடன் பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸ், இராணுவம்ஆகியதரப்பினரும்இணைந்து கண்காணிப்பு பணியில் ஈடுபடவுள்ளனர்.

இதன்போது, கொரோனா தொற்று குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் கடைகள், சந்தைகள், பேருந்துகள், பொது இடங்களில் சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்று கண்காணிக்கப்படும்.

சுகாதார விதிமுறைகளை மீறிச் செயல்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

# தனியார் பஸ்கள் இன்று முதல் 25 வீதம் மாத்திரமே சேவையில்



இன்று திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 25 வீத தனியார் பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடவுள்ளன என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கொரோனாக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக வகுப்புகள், பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்பன இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அலுவலகங்களுக்குக் குறைந்த எண்ணிக்கையிலேயே ஊழியர்கள் அழைக்கப்படுகின்றனர். இதன் காரணமாக பஸ்களில் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இதன் காரணமாக பஸ்களின் எரிபொருள் செலவுக்கேனும் போதுமான வருமானத்தை ஈட்ட முடியாத நிலைக்கு பஸ் உரிமையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இன்று திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 25 வீத பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடிவெடுத்துள்ளோம் - என்றார்.

இதனிடையேபஸ்சேவையை மட்டுப்படுத்த இலங்கை போக்குவரத்துச் சபையும் முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

பயணிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாலும், பல ஊழியர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியமையாலும் இலங்கை போக்கு வரத்துச் சபை இந்த முடிவை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கின்றது.

எனினும், பயணிகள் சிரமத்துக்கு ஆளாகாத நிலையில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இலங்கை போக்குவரத்துச் சபை உறுதியளித்துள்ளது.

# கொரோனாத் தொற்று ஆபத்தால் ஆள்பதிவுத் திணைக்களம் பூட்டு!

## விசேட தொடர்பு இலக்கம் அறிமுகம்

ஆள்பதிவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து பிராந்திய அலுவலகங்களால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் மீள அறிவிக்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவலால் பொது இடங்களில் மக்கள் கூடுவதைத் தடுக்கும் வகையில், சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட பரிந்துரைகளுக்குஅமையஇந்தநடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் அறிவித்தார்.

எனினும், எதிர்வரும் நாள்களில், முன்பதிவு செய்து கொண்ட விண்ணப் பதாரர்களுக்காக தேசியஅடையாளஅட்டைகளை வழங்கும் நடவடிக்கை தபால் மூலம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய அடையாள அட்டைகளுக்காக இதுவரை விண்ணப்பிக்காதவர்கள், தமது விண்ணப்பங்களைப் பிராந்திய அலுவலகங்களில் வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தமது பகுதிக்கான கிராம சேவகரிடம் ஒப்படைக்குமாறும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பரீட்சைகள் மற்றும் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட அவசர தேவைகளுக்காக தேசிய அடையாள அட்டையைப் பெற வேண்டுமென்றால் பிரதான அலுவலகத்தின் 0115 226 126 அல்லது 0115 226 100 என்ற தொலைபேசி எண்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, தென் மாகாணத்துக்கு 0912 228 348 என்ற தொலைபேசி இலக்கமும், வடமேல் மாகாணத்துக்கு 0372 224 337 என்ற தொலைபேசி இலக்கமும், கிழக்கு மாகாணத்துக்கு 0652 229 449 என்ற தொலைபேசி இலக்கமும், வடக்கு மாகாணத்துக்கு 0242 227201 என்ற தொலைபேசி இலக்கமும் ஆள்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை விட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது

## இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர கூறுகிறார்



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை விட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்கவே 69 லட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஆகவே இந்த விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை இணைய வழியூடாக இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற காலத்தில் இருந்து மே தின கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்த முடியாத துரதிஷ்ட நிலை ஏற்பட்டது.

இம்முறை மே தின கூட்டத்தை வெகு விமரிசையாக நடத்தத் திட்டமிட்டிருந்தோம். புத்தாண்டு கொவிட் கொத்தணியின் காரணமாக உழைக்கும் வர்க்கத்தினரை ஒன்றிணைத்து கூட்டங்களை நடத்த முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் ஒரு நாடு - ஒரு சட்டம், அனைவருக்கும் சமவுரிமை என்ற இலக்கிற்கு அமைய இம்முறை சர்வதேச தொழிலாளர் தினத்தை கொண்டாடுகிறது.

நாட்டு மக்கள் அனைவரும் பொது சட்டத்தைப் பின்பற்ற வேண்டும். பொதுச் சட்டத்திற்குப் புறம்பாக ஒரு தரப்பினர் செயற்படும் போது முரண்பாடுகள் மாத்திரம் தோற்றம் பெறும்.

தமிழ் பிரிவினைவாதம் நாட்டின் அரசமைப்பிற்கு முரணாகச் செயற்பட்டதால் பாரிய விளைவுகள் நாட்டில் தோற்றம் பெற்றன.

30 வருட கால யுத்தம் பல்வேறு தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நாட்டிலிருந்து இல்லாதொழித்தார்.

தமிழ் பிரிவினைவாதத்தை விட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது. இதன் விளைவை 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் ஊடாக விளங்கிக் கொள்ள முடிந்தது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு இதற்காகவே 69 லட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கத்தைத் தோற்றுவித்துள்ளார்கள்.

அரசியல் நோக்கங்களினால் முடக்கப்பட்டிருந்த தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்துள்ளோம்.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த உழைக்கும் வர்க்கத்தினர் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இன்று பல்வேறு சவால்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தோற்றம் பெற்றுள்ளன. சவால்களை வெற்றிகொள்ள அனைத்து தரப்பினரும் ஒன்றுபட வேண்டும். - என்றார்.

# தனவந்தர்களைப் பாதுகாக்கிறது அரசு எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுவதற்குத் தடை விதித்து அவர்களின் உரிமைகளை முடக்கி உயர் மட்டத்திலுள்ளவர்களைப் பாதுகாப்பதற்கான முதலாளித்துவ போக்கில் அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறான சூழலை மாற்றியமைக்கக் கூடிய பலம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் மாத்திரமே காணப்படுகிறது என்று எதிரக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் முகப்புத்தக நேரலையூடாக உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

பொருளாதார வளர்ச்சியின் வேகம் உயர்வடையும் போது தொழிலாளர்களின் பொருளாதார வளர்ச்சி வேகமும் அதிகரிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி முதலாளிமார்களின் கட்சியல்ல. இது நாட்டு மக்களுக்கான மக்களின் கட்சியாகும். தொழிலாளர்களின் கரங்களால் ஆட்சியைக் கைப்பற்றிய இந்த அரசாங்கம் அவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்குப் பதிலாக , அவர்களிடமிருந்து அதனைப் பறித்து முதலாளிமாருக்கே வழங்கியுள்ளனர்.

வரி நிவாரணம் ஊடாக முதலாளி வர்க்கத்தினருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சலுகைகளால் நாட்டுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாகவே தொழிலாளர்களுக்குத் திருப்தியடைக் கூடிய வாழ்வாதாரம் கிடைக்கப் பெறாமலுள்ளது. இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு வலுவான அரசியல் தலைமைத்துவமே தேவையானதாகும்.

இவ்வாறான சூழலை உருவாக்கக் கூடிய வாய்ப்பு ஐக்கிய மக்கள் சக்திக்கு மாத்திரமே காணப்படுகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அரச அதிகாரம் கிடைத்தவுடன் தொழிலாளர்களை ஆட்சியாளர்களாக்குவதாகக் கூறினார்கள். ஆனால் தற்போது தடை விதித்து, தொழிலாளர்களின் உரிமையை முடக்கி அவர்களைப் புறந்தள்ளி நாட்டில் உயர் மட்டத்திலுள்ளவர்களைப் பாதுகாப்பதற்கான முதலாளித்துவ போக்கில் அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கிறது.

எமது ஆட்சியில் 3,000 - 24,000 வரை சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதோடு , தற்போதைய அரசாங்கத்தால் இல்லாமலாக்கப்பட்ட சம்பளமும் மீள வழங்கப்படும். அது மாத்திரமன்றி தற்போதைய சூழலுக்கு உகந்த சம்பள முறைமையை தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம். நீக்கப்பட்டுள்ள ஓய்வூதிய கொடுப்பனவும் அவர்களது சம்பளத்துக்கு நிகராக வழங்கப்படும். இதே போன்று தனியார் துறைகளில் தொழில்புரிபவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் எமது ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

# நீதிமன்றச் செயற்பாடுகள் 5 நாள்கள் மட்டுப்படுத்தல்

நீதிமன்ற நடவடிக்கைகளை ஐந்து நாளகளுக்கு மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் யு.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் மே மாதம் 03 ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை நீதிமன்ற நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன.

அன்றைய தினங்களில் சந்தேகநபர்கள் மற்றும் பிரதிவாதிகள் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டிய அவசியமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் கொவிட் தொற்று தீவிரம் அடைந்து வரும் நிலையில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரிவுகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பல பிரதேசங்களில் தீ விபத்துக்கள்

ஹோமாகம தலகல பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டு உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் விற்பனை நிலையமொன்றில் கடந்த சனிக்கிழமை இரவு தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது.

தீப்பரவலால் விற்பனை நிலையம் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டடம் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹொரணை நகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்த கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பலனளிக்கவில்லை.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், மொரகஹஹேன பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மொரகஹஹேன, கிரிவத்துடுவ பிரதேசத்தில் அமைந்து இரண்டு மாடிக் கட்டடமொன்றில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார், ஹொரணை மற்றும் களுத்துறை தீயணைப்பு பிரிவினர் இணைந்து தீயினைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீப்பரவலில் உயிர் ஆபத்துக்கள் எதுவும் பதிவாகாத நிலையில் பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ரக்குவானை நகரில் அமைந்துள்ள கடைத் தொகுதியொன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, 4 விற்பனை நிலையங்களுக்கு தீ பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீப்பரவலிலும் உயிர் சேதங்கள் பதிவாகாத நிலையில், பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஈ தக்சலா, குருகெதர வேலைத்திட்டங்களின் மூலமாக மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கை வழங்க ஏற்பாடு

பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் காலப் பகுதியில் இணையத் தளத்தின் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ஈ தக்சலா, குருகெதர வேலைத் திட்டங்களின் மூலமாக மாணவர்கள் பயனடைய முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதன் பின்னரும் குறித்த வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

பாடவிதானங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் எதிர்வரும் ஒகஸ்ட் மாத விடுமுறையை மட்டுப்படுத்துவது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தானில் குண்டுத் தாக்கு; இலங்கை அரசு கடும் கண்டனம்

ஆப்கானிஸ்தானில் உள்ள லோகர் மாகாணத்தின் புல் - இ - ஆலம் நகரில் கடந்த 30 ஆம் திகதி பொது மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்கு இலங்கை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள், குறிப்பாக மாணவர்கள் மற்றும் குழந்தைகள் மீதான கண்மூடித்தனமான வன்முறை, அராஜகத்தைக் கொண்டுவர விரும்பும் குற்றவாளிகளின் கொடுமையை இந்தத் தாக்குதல் நிரூபிக்கிறது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு நீடித்த அமைதியைக் கொடுப்பதற்காக தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துடன் உறுதியாக நிற்கிறோம் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் கார் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட 30 பேரில் உயர்நிலைப் பாடசாலை மாணவர்களும் அடங்குகின்றனர் என பி.பி.சி. தெரிவித்துள்ளது.

கிழக்கு லோகர் மாகாணத்தின் தலைநகரான புல் - இ - ஆலத்தில் மாணவர்கள் தங்கியிருந்தனர் எனக் கூறப்படும் விருந்தினர் மாளிகைக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை வெடி குண்டு வெடித்தது.

டசின் கணக்கான மக்கள் காயமடைந்தனர். கூரைகள் இடிந்து விழுந்தன எனவும், பாதிக்கப்பட்டவர்களை இடிபாடுகளின் கீழ் சிக்கியுள்ளனர் எனவும் சாட்சிகள் விவரித்தனர்.

செப்ரெம்பர் 11 இற்குள் அமெரிக்க துருப்புக்கள் திரும்பப் பெறுவோம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்ததிலிருந்து ஆப்கானிஸ்தானில் வன்முறை அதிகரித்துள்ளது. உள்ளூர் நேரப்படி சுமார் 7 மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருந்தது.

கொல்லப்பட்டவர்களில் சில உயர்நிலைப் பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் கலந்து கொள்ளத் தயாராகி வருகின்றவர்கள் என லோகரின் மாகாண சபைத் தலைவர் ஹசிபுல்லா ஸ்டானெக்ஸாய் தெரிவித்தார்.

90 பேர் காயமடைந்ததாக உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தாரிக் அரியன் தெரிவித்தார். இந்த தாக்குதல் குறித்த பகுதியில் பரவலான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார். "வீடுகளின் கூரைகள் இடிந்து விழுந்துள்ளன, மக்கள் இடிபாடுகளின் கீழ் சிக்கியுள்ளனர் என்று அவர் கூறினார். 'பாதுகாப்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசனுக்கு இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்வோம்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



கொழும்பு, மே.03

இலங்கையில் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படும்போது, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.

– இவ்வாறு அமைச்சர் டலஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் ஒட்சிசன் தயாரிக்கும் நிறுவனங்களின் திறன் மற்றும் கையிருப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அவசியமான அளவு ஒட்சிசன் இதுவரையில் கையிருப்பில் உள்ளது.

மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த, ஏனைய இடங்களிலும் ஒட்சிசன் வழங்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது – என்றார்.




# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தப்பி வந்த பெண் ஒருவர் கைது

இந்தியாவில் இருந்து மீன்பிடிப் படகொன்றில் வந்து புத்தளம் வென்னப்புவ பிரதேசத்தில் வீடொன்றில் பதுங்கியிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஒருவர் அவரின் இரண்டு குழந்தைகளுடன் சுகாதாரப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டார்.

எவ்வாறாயினும், குறித்த பெண்ணுடன் இந்தியாவில் இருந்து வந்தார் எனக் கூறப்படும் மற்றுமொரு பெண் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் பதிவாகவில்லை.

இந்தியாவின் சென்னை குப்பம் பகுதியில் இருந்து இந்தப் பெண் மீன்பிடிப் படகு மூலம் கடந்த சனிக்கிழமை அதிகாலை வந்து புத்தளம் வென்னப்புவ பிரதேசத்தில் வீடொன்றில் பதுங்கியிருந்துள்ளார்.

14 மற்றும் 4 வயதுடைய அவருடைய குழந்தைகளுடன் அவர் இவ்வாறு வருகை தந்துள்ளார்.

இது தொடர்பில் தகவல் தெரிய வந்தமையைத் தொடர்ந்து பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவின் அதிகாரிகள் புத்தளம் வென்னப்புவ பிரதேசத்தில் அவர் பதுங்கியிருந்த வீட்டுக்குச் சென்று அவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

# கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை முடக்கம்

இலங்கையில் உடன் அமுலுக்கு வரும் வகையில் மேலும் சில பிரதேசங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தபளதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை பொலிஸ் அதிகாரப் பிரிவு தனிமைப்படுத்தப் பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தின் ஓர்ஸ் ஹில் மற்றும் அன்புவழிபுரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

பாணந்துறை தெற்கு பிரதேசத்தின் வடக்கு வேகட, கிரிபேரிய மற்றும் கிழக்கு பாலமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தின் நீலதண்டாஹின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவில் கடற்றொழில்சார் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



முல்லைத்தீவு மாவட்டத்தில் உடனடியாகத் தீர்வு காணவேண்டிய கடற்றொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில்கடந்தசனிக் கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், துறைசார் அதிகாரிகள், நாரா தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அத்துடன், நாயாறு பிரதேசத்தில் பாரம்பரியமாகக் கடற்றொழிலில் ஈடுபட்ட சிலாபம் கருக்குப்பனையைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடிப்பதற்கான அனுமதியை வரையறை செய்யும் பொறிமுறை தொடர்பாகவும் பேசப்பட்டுள்ளது.

மேலும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் நந்திக்கடல் களப்பு புனரமைப்பின் முதற்கட்டம் நிறைவடைந்துள்ளதுடன் அடுத்தக் கட்டப் பணிகளும் விரைவுபடுத்தப்பட வேண்டுமெனக் கோரப்பட்டது.

இதற்குப் பதிலளித்த தேசிய நீரியல் வள ஆய்வு நிறுவகத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா, இரண்டாம் கட்டப்பணிகள் தொடர்பான தமது ஆய்வுகள் நிறைவடைந்தன எனக் குறிப்பிட்டார்.

இந்நிலையில், வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் பெறப்பட வேண்டிய அனுமதி தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று, முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு கடற்றொழில் சார் விவகாரங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு சில தீர்மானங்கள் எடுக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.05.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org